Postal Reg.No. GDP-39/2017-2019

بسم الله الرحمن الرحيم نحمده ونصلي على رسوله الكريم وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 2

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 1-2

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ர:ஃபீக் அஹ்மது

6-13 ரபீவுஸ் ஸானி 1438 ஹிஜ்ரி கமரி 5-12 சுலஹ் 1396 ஹிஜ்ரி ஷம்ஸி

5-12 ஜனவரி 2017

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்து –லில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல–னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**இதுவே வாக்களிக்கப்பட்ட மஸீஹ் தோன்றும் காலமாகும். நூற்றாண்டு ஆரம்பமாவதற்கு முன்பாகவே இவ்வாறு வாதம் செய்த ஒரே நபர் நானே ஆவேன். கிறித்தவர்களையும் ஏனைய சமுதாயங்களையும் இறைவனின் அடையாளங்கள் மூலமாக குற்றவாளிகளாக ஆக்கியவன் நானே ஆவேன். எனவே, எதுவரை எனது இந்த வாதத்திற்கு எதிரில் அதே பண்புகளுடைய இன்னொரு வாதியை நீங்கள் முன்னிறுத்தாத வரை இறுதிக் காலத்தின் சீர்திருத்தவாதியாக தோன்றவிருந்த அந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹ் நானே ஆவேன் என்ற எனது வாதம் நிரூபிக்கப்பட்டு விடும்.**

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

**முதல் அடையாளம்:**

قَالَ رَسُوْلُ اللّٰہِ صَلَّی اللّٰہُ عَلَیْہِ وَسَلَّمَ اِنَّ اللّٰہَ یَبْعَثُ

لِھٰذِہِ الْاُمَّۃِ عَلٰی رَأْسِ کُلِّ مِائَۃِ سَنَۃٍ مَنْ یُّجَدِّدُ لَھَا دِیْنَھَا

அதாவது, ஒவ்வொரு நூற்றாண்டின் ஆரம்பத்திலும் அவனது மார்க்கத்தைப் புதுப்பிக்கின்ற ஒருவரை இந்த சமுதாயத்திற்காக அவன் அனுப்புவான். (அபூதாவூது)

இப்போது இந்த நூற்றாண்டின் இருபத்தி நான்காவது வருடம் கடந்து கொண்டிருக்கின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியது நிறைவேறுவதில் தாமதம் ஏற்படுவது சாத்தியமற்றதாகும். இது ஆதாரப் -பூர்வமான ஹதீஸ் என்றால் 12 நூற்றாண்டுகளின் சீர்திருத்தவாதிகளின் பெயரைக் கூறவும் என்று எவராவது கேட்டால் அதற்கான பதில் இதுவாகும். மேலும், இந்த நபிமொழி உம்மத்திலுள்ள ஆலிம்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டே வந்திருக்கின்றது. நான் வாதம் செய்த சமயத்தில் இந்த நபிமொழி பலவீனமானது என்று கூறப்பட்டாலும் கூட இந்த மவ்லவிமார்களின் இந்தக் கூற்றும் உண்மையானதாகும். ஹதீஸ் வல்லுனர்களான சில சான்றோர்கள் தத்தமது காலக்கட்டத்தில் தாமே சீர்திருத்தவாதி என்று வாதமும் செய்துள்ளனர். சிலர் மற்றவர்களை முஜத்தித் (சீர்திருத்தவாதி) ஆக ஆக்குவதற்கு முயற்சியும் செய்துள்ளனர். இந்த ஹதீஸ் ஆதாரப்பூர்வமானது என்றால், அவர்கள் நேர்மையுடன் நடந்து கொள்ளவில்லை. எல்லா சீர்திருத்தவாதிகளின் பெயரும் நமக்கு நினைவில் இருக்க வேண்டும் என்பது அவசியமான ஒன்றல்ல. இதைப் பற்றிய குறிப்பான எல்லாவற்றையும் சூழ்ந்துள்ள முழுமையான அறிவு இறைவனுக்கே இருக்கின்றது. மறைவானவற்றை அறிந்தவர்களாவோம் என்ற வாதம் எங்களுக்கு இல்லை. ஆனால், இறைவன் எந்த அளவு இதைப் பற்றி நமக்கு கூறியுள்ளானோ அதையே நாம் கூறியுள்ளோம். இதை தவிர இந்த சமுதாயத்தின் ஒரு பெரும் பகுதி உலகில் பரவி இருக்கின்றது. இறைவனது நாட்டமானது எப்போதாவது ஏதாவதோர் ஒரு நாட்டில் சீர்திருத்தவாதியைப் பிறக்க வைக்கின்றது. சில நேரங்களில் வேறு ஒரு நாட்டில் அவரை பிறக்க வைக்கின்றது. எனவே, இறைவனின் பணிகள் பற்றி யார்தான் முழுமையாக அறிந்து கொள்ள முடியும்? யார் அவனது மறைவான செய்திகளை முழுமையாக அறிந்து கொள்ள முடியும்? முதலில் ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்களின் காலத்திலிருந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலம் வரை ஒவ்வொரு சமுதாயத்திலும் எத்தனை நபிமார்கள் வந்துள்ளனர் என்பதை நீங்கள் கூறி விட்டால் எத்தனை சீர்திருத்தவாதிகள் வந்துள்ளனர் என்பதை நாங்களும் கூறி விடுவோம். ஒன்றைப் பற்றிய அறிவு இல்லாமல் இருப்பதனால் அந்தப் பொருளே இல்லை என்பது கட்டாயமானதல்ல. இதுவும் கூட அஹ்லே சுன்னத்தின் (சுன்னத்தைச் சார்ந்தவர்களின்) ஒருமித்த கருத்தாகும். அதாவது, இந்த உம்மத்தின் இறுதி சீர்திருத்தவாதி வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஆவார். அவர் இறுதிக் காலத்தில் தோன்றுவார். இப்போது நாம் ஆராய வேண்டிய விஷயம் இது இறுதிக் காலமா? அல்லது இறுதிக் காலம் இல்லையா? என்பதேயாகும். இது இறுதிக் காலமாகும் என்பதில் யூதர்கள், கிறித்தவர்கள் ஆகிய இரண்டு சமுதாயத்தைச் சார்ந்தவர்களும் ஒருமித்த கருத்தையுடையவர்களாக இருக்கின்றனர். நீங்கள் விரும்பினால் இதைப் பற்றி அவர்களிடம் கேட்டுப் பாருங்கள். கொள்ளை நோய் பரவியுள்ளது. பூகம்பங்கள் வருகின்றன. வழக்கத்திற்கு மாற்றமான எல்லா அழிவுகளும் ஏற்பட ஆரம்பித்திருக்கின்றன. அவ்வாறிருக்க, இது இறுதிக் காலம் இல்லையா? இஸ்லாத்திலுள்ள இறைவனின் நல்லடியார்கள் கூட இந்தக் காலத்தை இறுதிக் காலம் என்றே கூறியுள்ளனர். பதினான்காம் நூற்றாண்டு ஆரம்பித்து இப்போது இருபத்தைந்து வருடங்கள் கழிந்து விட்டன. இதுவே வாக்களிக்கப்பட்ட மஸீஹ் தோன்ற வேண்டிய காலமாகும் என்பதற்கான வலுவான ஆதாரமாக இருக்கின்றது. இந்த நூற்றாண்டு ஆரம்பமாவதற்கு முன்னதாகவே இவ்வாறு வாதம் செய்துள்ள ஒரே நபர் நானே ஆவேன். இதுவே வாக்களிக்கப்பட்ட மஸீஹ் தோன்றும் காலமாகும். நூற்றாண்டு ஆரம்பமாவதற்கு முன்பாகவே இவ்வாறு வாதம் செய்த ஒரே நபர் நானே ஆவேன். கிறித்தவர்களையும் ஏனைய சமுதாயங்களையும் இறைவனின் அடையாளங்கள் மூலமாக குற்றவாளிகளாக ஆக்கியவன் நானே ஆவேன். எனவே, எதுவரை எனது இந்த வாதத்திற்கு எதிரில் அதே பண்புகளுடைய இன்னொரு வாதியை நீங்கள் முன்னிறுத்தாத வரை இறுதிக் காலத்தின் சீர்திருத்தவாதியாக தோன்றவிருந்த அந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹ் நானே ஆவேன் என்ற எனது வாதம் நிரூபிக்கப்பட்டு விடும். பல்வேறு காலங்களில் அல்லாஹ் பல விஷயங்களை நிறைவடையச் செய்கின்றான். ஒரு நேரம் இருந்தது. இறைவனின் உண்மையான மஸீஹை சிலுவை நிலையிலேயே வைத்தது; அவரை காயப்படுத்தியது. இறுதிக் காலத்தில் இயேசு சிலுவையை முறிப்பார் என்பது விதிக்கப்பட்டிருக்கின்றது. அதாவது, வானத்தின் அடையாளங்கள் மூலமாக நமது பாவங்களுக்காக இயேசு சிலுவையில் மரணித்தார் என்ற கொள்கையை அவர் தகர்த்து விட்டார். எனவே, முந்தைய காலத்தில் நடந்ததற்கான பரிகாரம் இப்போது நிறைவேற்றப்பட்டு விட்டது.

(ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 200-202)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

கடந்த நாட்களில் நான் கனடாவின் சுற்றுப் பயணத்தில் இருந்தேன். அது ஏறக்குறைய ஆறு வாரங்களை உள்ளடக்கிய சுற்றுப் பயணமாக இருந்தது. அல்லாஹ்வின் அருளால் எல்லா வகையிலும் இந்த சுற்றுப் பயணம் அருளுக்குரியதாக அமைந்தது. ஜமாஅத்தினுடைய நிகழ்ச்சிகள் அடிப்படையிலும் சரி, மற்றவர்களோடு நடைபெற்ற நிகழ்ச்சிகளும் சரி அருளுக்குரியதாக இருந்தது.

அல்லாஹ்வின் அருளால் கனடாவின் ஜமாஅத்தும் உலகின் பெரும்பாலான பிற ஜமாஅத்துகளைப் போன்று கலப்பற்ற தன்மை மற்றும் விசுவாசத்தில் பாதங்களை முன்னெடுத்து வைக்கக்கூடிய ஜமாஅத்தாக இருக்கின்றது. அல்லாஹ்வின் அருளால் இளைஞர்களும், இளம் பெண்களும் ஜமாஅத் பணிகளில் முன்னேறக்கூடிய ஆன்மாவைக் கொண்டவர்களாக இருக்கின்றனர். குறிப்பாக பிரஸ் மற்றும் மீடியா தொடர்பாக இளைஞர்கள் பெரும் பணியாற்றியுள்ளனர். பரந்த அளவில் அறிமுகம் ஏற்படச் செய்வதற்கு முயற்சி செய்துள்ளனர். அல்லாஹ்வும் அவர்களுடைய இந்த முயற்சிக்கு கனிகளை வழங்கியுள்ளான். அரசியல்வாதிகள் மற்றும் அரசாங்க அதிகாரிகளோடு ஆரம்பத்திலிருந்தே தொடர்பும் இருந்தது. நல்ல அறிமுகமும் இருந்தது. அதிலும் இவர்கள் முன்னேறியிருக்கின்றனர். ஆனால், இந்த முறை ஊடகங்களோடு உள்ள தொடர்பில் ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றம் தென்பட்டது. ஆனால், அசல் விஷயம் என்னவென்றால் இது முழுக்க முழுக்க அல்லாஹ்வின் அருளினாலேயே நடந்துள்ளது. இவர்கள் முயற்சி செய்தார்கள். ஆனால் அல்லாஹ் அதில் அளவற்ற அருள் செய்துள்ளான். மாறாக, இந்த பணி செய்யக்கூடிய இளைஞர்கள், எங்களுடைய எதிர்பார்ப்புகளை விட அதிகமாக எங்களுக்கு வரவேற்பு கிடைத்துள்ளது என்பதை அவர்களே ஏற்றுக் கொள்கின்றனர்.

அல்லாஹ்வின் அருளால் அங்கு மூன்று புதிய பள்ளிவாயில்கள் கட்டப்பட்டுள்ளது. அதில் இரண்டு பள்ளிவாயில்களின் திறப்பு விழாவின்போது எப்படிப்பட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன என்றால் அதில் அந்நியர்கள் அழைக்கப்பட்டனர். பாராளுமன்றத்திலும் ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. York University -யிலும் நான் சொற்பொழிவாற்றினேன். Toronto -வில் Peace Symposium நடைபெற்றது. Calegary –யிலும் Peace Symposium நடைபெற்றது. அதில் மற்றவர்களுக்கு முன் இஸ்லாத்தின் போதனைகளை எடுத்துரைக்கும் வாய்ப்பு கிடைத்தது. அல்லாஹ்வின் அருளால் எல்லா இடங்களிலும் மக்கள் இஸ்லாமிய போதனைகளின் அழகை ஏற்றுக் கொண்டனர்.

Toronto -வில் மூன்று நேர்காணல்கள் நடைபெற்றன. அதில் Globle News Toronto -வின் ஒரு நேர்காணல் இருந்தது. இரண்டாவது நேர்காணல் CBC -யோடு நடைபெற்றது. இது அங்குள்ள தேசிய News Channel ஆகும். இதே போன்று Globe & Mail ஒரு தேசிய பத்திரிகை ஆகும். அந்த பத்திரிகையின் தரப்பிலிருந்து நேர்காணல் நடைபெற்றது.

Hill பாராளுமன்றத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் தொடர்பாகவும், ஏனைய பல்வேறு நிகழ்ச்சிகள் தொடர்பாக ஓரளவு விரிவாகவும், அதில் கலந்து கொண்ட கண்ணியத்திற்குரிய விருந்தினர்களுக்கு ஏற்பட்ட தாக்கங்கள் தொடர்பாகவும் ஆன்மாவிற்கு எழுச்சியூட்டும் வகையிலும் உள்ளத்தை ஈர்க்கக்கூடிய வகையிலும் ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள்.

கனடாவின் சுற்றுப் பயணத்தின்போது மொத்தமாக கிடைத்த மீடியா கவரேஜில் 32 தொலைக்காட்சி சேனல்கள் ஐந்து மொழிகளில் நிகழ்ச்சிகளை ஒளிபரப்பின. இதன் மூலமாக 40 மில்லியன் மக்கள் வரை தூதுச் செய்தி எட்டியது. ஆறு மொழிகளில் பல்வேறு ரேடியோ நிலையங்கள் மூலம் 30 செய்திகள் ஒலி பரப்பப்பட்டன. இதன் மூலம் 8 இலட்சம் பேர் வரை தூதுச் செய்தி எட்டியது. மொத்தமாக 227 செய்தித்தாள்களில் 12 பல்வேறு மொழிகளில் செய்திகள் வெளி வந்தன. நேர்காணல் வெளி வந்தது. இதன் மூலமாக 4.8 மில்லியன் மக்கள் வரை தூதுச் செய்தி எட்டியது. பிறகு Social Media & Electornic Media மூலமாக 14.6 மில்லியன் மக்கள் வரை தூதுச் செய்தி எட்டியது. இவ்வாறு மொத்தமாக அங்குள்ள மக்களின் கணிப்பின்படி அனைத்து வழிவகைகளையும் ஒன்றிணைத்துப் பார்க்கும்போது 60 மில்லியனுக்கும் மேற்பட்டோர் வரை தூதுச் செய்தி சென்றடைந்துள்ளது.

இது அல்லாஹ்வின் அருளாகும். இந்த அருளுக்கு நாம் மதிப்பளிக்க வேண்டும். மேலும் இதை பாதுகாக்கவும் வேண்டும். குறிப்பாக கனடாவின் அஹ்மதிகள் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். அதன் மூலம் அல்லாஹ்வின் அருள் மேலும் அதிகமாக வேண்டும். நம்முடைய அனைத்து பணிகளிலும் அஹ்மதிய்யத் மற்றும் உண்மையான இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எட்ட வைக்க வேண்டும் என்ற எண்ணம் இருக்க வேண்டும். ஏகத்துவத்தை உலகில் நிலைநாட்டும் எண்ணம் இருக்க வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கொடியை உலகில் பறக்க விடும் எண்ணம் இருக்க வேண்டும் என்பதை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். அவ்வாறிருக்கும் என்றால் அல்லாஹ் நம்முடைய பணிகளில் அருள் செய்வான்.

குறிப்பாக Peace Village மற்றும் Abode of Peace -ல் வசிக்கின்ற அஹ்மதிகளிடம் இந்த எனது போதனையை வலியுறுத்திக் கூறிக் கொள்கின்றேன். அதாவது அங்கு அஹ்மதி சூழலை உருவாக்குங்கள். அதை நிலைநாட்டுங்கள். மேலும் அதிகமதிகம் சரியான இஸ்லாத்தின் முன்மாதிரியை நிலைநாட்டுபவர்களாக இருப்பதற்கு நீங்கள் முயற்சி செய்ய வேண்டும். மேலும் நான் அங்கிருக்கும்போது எவ்வாறு கிலாஃபத்தோடு கலப்பற்ற தன்மையையும் நன்றியுணர்வையும் வெளிப்படுத்தினீர்களோ இனிமேலும் அதை அதிகரிக்கக் கூடியவர்களாக இருப்பீர்களாக! மேலும் முன்னேறிச் செல்லுங்கள். மேலும் நாம் அல்லாஹ்வோடு தொடர்பை ஏற்படுத்த வேண்டும் என்கின்ற அசல் நோக்கத்தை மறந்து விட வேண்டாம். மேலும் அவனை வணங்குவதில் நாம் ஒருபோதும் சோம்பேறித்தனமாக இருந்து விடக்கூடாது.

சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்
(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் மார்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்**
**18 நவம்பர் 2016** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1395 -ஆம் ஆண்டு **நுபுவ்வத்** மாதம் **18 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ. اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ. مٰلِكِ يَوْمِ الدِّيْنِ. إِيَّاكَ نَعْبُدُ
وَإِيَّاكَ نَسْتَعِيْنُ. اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ. صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ.

நீங்கள் அனைவரும் அறிந்ததுபோன்று கடந்த நாட்களில் நான் கனடாவின் சுற்றுப் பயணத்தில் இருந்தேன். ஏறக்குறைய ஆறு வாரங்களை உள்ளடக்கிய சுற்றுப் பயணமாக அது இருந்தது. அல்லாஹ்வின் அருளால் எல்லா வகையிலும் இந்த சுற்றுப் பயணம் அருளுக்குரியதாக அமைந்தது. ஜமாஅத்தின் நிகழ்ச்சிகள் அடிப்படையிலும் சரி, மற்றவர்களோடு நடைபெற்ற நிகழ்ச்சிகளும் சரி அருளுக்குரியதாக இருந்தது. கனடாவின் ஆண்டு மாநாட்டிற்குப் பிறகு அந்த ஆண்டு மாநாடு தொடர்பாக மக்களுடைய கருத்துக்கள் மேலும் அமைப்பு ரீதியான விஷயங்கள் மேலும் அல்லாஹ்வின் அருள்களுக்கு நன்றி தெரிவித்தல் தொடர்பாக அங்கேயே ஆண்டு மாநாட்டிற்கு அடுத்து குத்பாவில் கூறியிருந்தேன்.

இன்று மற்ற நிகழ்ச்சிகள் எவ்வாறிருந்தது என்பது பற்றி சிலவற்றை எடுத்துக் கூறுவேன். அல்லாஹ்வின் அருளால் கனடாவின் ஜமாஅத்தும் உலகின் பெரும்பாலான பிற ஜமாஅத்துகளைப்போன்று கலப்பற்ற தன்மை மற்றும் விசுவாசத்தில் பாதங்களை முன்னெடுத்து வைக்கக்கூடிய ஜமாஅத்தாக இருக்கின்றது. அல்லாஹ்வின் அருளால் இளைஞர்களும், இளம் பெண்களும் ஜமாஅத் பணிகளில் முன்னேறக்கூடிய ஆன்மாவைக் கொண்டவர்களாக இருக்கின்றனர். குறிப்பாக பிரஸ் மற்றும் மீடியா தொடர்பாக இளைஞர்கள் பெரும் பணியாற்றியுள்ளனர். பரந்த அளவில் அறிமுகம் ஏற்படச் செய்வதற்கு முயற்சி செய்துள்ளனர். அல்லாஹ்வும் அவர்களுடைய இந்த முயற்சிக்கு கனிகளை வழங்கியுள்ளான். அரசியல்வாதிகள் மற்றும் அரசாங்க அதிகாரிகளோடு ஆரம்பத்திலிருந்தே தொடர்பும் இருந்தது. நல்ல அறிமுகமும் இருந்தது. அதிலும் இவர்கள் முன்னேறியிருக்கின்றனர். ஆனால் இந்த முறை ஊடகங்களோடு உள்ள தொடர்பில் ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றம் தென்பட்டது. ஆனால் அசல் விஷயம் என்னவென்றால் இது முழுக்க முழுக்க அல்லாஹ்வின் அருளினாலேயே நடந்துள்ளது. இவர்கள் முயற்சி செய்தார்கள். ஆனால் அல்லாஹ் அதில்

அளவற்ற அருள் செய்துள்ளான். மாறாக, இந்த பணி செய்யக்கூடிய இளைஞர்கள், எங்களுடைய எதிர்பார்ப்புகளை விட அதிகமாக எங்களுக்கு வரவேற்பு கிடைத்துள்ளது என்பதை அவர்களே ஏற்றுக் கொள்கின்றனர்.

பிரஸில் எப்படியாவது நம்முடைய செய்தி வந்து விட வேண்டும் என்று முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதன் மூலம் ஜமாஅத்தின் அறிமுகமும் கிடைக்க வேண்டும். இஸ்லாத்தின் அறிமுகமும் ஏற்பட வேண்டும் என்பதற்காக முயற்சிக்கப்பட்டது. ஆனால் பிரஸ் மற்றும் மீடியாவோ மிகவும் உதாசீனப்படுத்தி வந்தது. இந்த முறை எங்களுக்காக நேரம் ஒதுக்குங்கள். நாங்கள் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் இமாமோடு நேர்காணல் காண வேண்டும் என ஊடகத்தினர் நம் பின்னால் வந்தனர். ஆனால் நேரம் குறைவாக இருந்ததன் காரணமாக நிர்பந்தம் ஏற்பட்டது. இந்த காரணத்தினால் எந்த அளவுக்கு ஊடகத்தோடு தொடர்பு கொள்ள முடியுமோ அல்லது நேர்காணல் வழங்க முடிந்ததோ அவ்வளவு மட்டுமே செய்ய முடிந்தது. மற்றவர்களுக்கு வருத்தம் தெரிவிக்க வேண்டியது ஏற்பட்டது. நம்முடைய அங்குள்ள Media Team –ம் எவர்களிடம் வருத்தம் தெரிவிக்கப்பட்டதோ அவர்களோடு தொடர்பை தொடரவும் வேண்டும். மேலும் அவர்களை சந்தித்தும் வருத்தம் தெரிவிக்க வேண்டும் அல்லது எழுத்துப்பூர்வமாக வருத்தம் தெரிவிக்க வேண்டும். இது இனிமேல் தொடர்பு கொள்வதற்கு மிகவும் அவசியமாகும்.

எவ்வாறிருப்பினும் இப்போது நான் சுருக்கமாக பல்வேறு நிகழ்ச்சிகளுடைய தாக்கங்களை உங்கள் முன் எடுத்து வைக்கின்றேன். அல்லாஹ்வின் அருளால் அங்கு மூன்று புதிய பள்ளிவாயில்கள் கட்டப்பட்டுள்ளது. அதில் இரண்டு பள்ளிவாயில்களின் திறப்பு விழாவின்போது எப்படிப்பட்ட ஏற்பாடுகள் செய்யப் –பட்டிருந்தன என்றால் அதில் அந்நியர்கள் அழைக்கப்பட்டனர். பாராளுமன்றத்திலும் ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. York University –யிலும் நான் சொற்பொழிவாற்றினேன். Toronto –வில் Peace Symposium நடைபெற்றது. Calegary –யிலும் Peace Symposium நடைபெற்றது. அதில் மற்றவர்களுக்கு முன் இஸ்லாத்தின் போதனைகளை எடுத்துரைக்கும் வாய்ப்பு கிடைத்தது. அல்லாஹ்வின் அருளால் எல்லா இடங்களிலும் மக்கள் இஸ்லாமிய போதனைகளின் அழகை ஏற்றுக் கொண்டனர்.

முதலில் நான் Toronto –வில் கிடைத்த மீடியா கவரேஜ் பற்றி கூறுகிறேன். Toronto –வில் நடைபெற்ற மூன்று நேர்காணல் தவிர மற்ற நிகழ்ச்சிகள் மற்றும் University நிகழ்ச்சி தொடர்பாக பிறகு எடுத்துரைப்பேன். முதலில் Toronto –வில் மூன்று நேர்காணல்கள் நடைபெற்றன. அதில் Globle News Toronto –வின் ஒரு நேர்காணல் இருந்தது. இது கனடாவினுடைய புகழ்பெற்ற News Network ஆகும். இந்த நேர்காணல் ஒளிபரப்பப்பட்டது. ஏறக்குறைய மூன்று இலட்சம் பேர் இதனை கண்டனர். அறிக்கைகளின் அடிப்படையில் ஓர் இலட்சம் பேர் வரை Online –ல் பார்த்துள்ளனர். இதேபோன்று இரண்டாவது நேர்காணல் CBC –யோடு நடைபெற்றது. இது அங்குள்ள தேசிய News Channel ஆகும். அதனுடைய ஒரு புகழ்பெற்ற பத்திரிகையாளர் Chief Correspondent பீட்டர் மேன்ஸ் பிரிட்ஜ் நேர்காணல் செய்தார். முதலிலேயே நேர்காணல் செய்து விட்டார். ஆனால் இரண்டு வாரங்களுக்குப் பிறகுதான் அதனை ஒளிபரப்பினர். ஏறக்குறைய அரை மணி நேர நிகழ்ச்சியாக இருந்தது. அது தேசிய தொலைக்காட்சியில் காட்டப்பட்டது.

நான் கூறியது போன்று இவர் மிகவும் மூத்த பத்திரிகையாளர் ஆவர். மிகவும் முக்கியமானவராகக் கருதப்படுபவர். இஸ்லாம் தொடர்பாகவும் உலகத்தின் நிலைமை தொடர்பாகவும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது வருகை தொடர்பாகவும் மேலும் இன்றைய நாட்களில் தீவிரவாதிகள் இஸ்லாத்தை அவப்பெயருக்கு ஆளாக்கியிருப்பது தொடர்பாகவும் அதிகம் பேசப்பட்டது. சிலவற்றை அவர்கள் ஒளிபரப்பினர். சிலவற்றை விட்டு விட்டனர். எவ்வாறிருப்பினும் ஒரு நல்ல கவரேஜ் கிடைத்தது.

இதேபோன்று Globe & Mail ஒரு தேசிய பத்திரிகை ஆகும். அந்த பத்திரிகையின் தரப்பிலிருந்து நேர்காணல் நடைபெற்றது. நான் இதற்கு முன்னர் கூறிய CBC –யின் நேர்காணல் மூலமாக இவர்களுடைய கணிப்பின்படி கனடாவைச் சேர்ந்த ஏறக்குறைய பத்து மில்லியன் பேர் வரை தூதுச் செய்தி எட்டியது.

பிறகு பத்திரிகைகள் மூலமாகவும் விரிவான செய்திகள் வெளிவந்தன. Youtube Channel –லிலும் வந்தது. இதன் மூலமும் ஒரு மில்லியன் மக்கள் வரை செய்தி சென்றடைந்தது. பிறகு சொற்பொழிவு தொடர்பாகவும் பத்திரிகைகளும், செய்தித்தாள்களும் செய்தி வெளியிட்டன. அந்த சொற்பொழி University –யில் நிகழ்த்தப்பட்டது. இதற்கும் ஏறக்குறைய ஐந்து இலட்சம் பேர் வரை கவரேஜ் கிடைத்துள்ளது.

இப்போது நான் அடுத்த நிகழ்ச்சி பற்றி கூறுவேன். ஆண்டு மாநாட்டிற்குப் பிறகு அவர்களின் தலைநகரமான ஆட்டுவாவின் பாராளுமன்றத்தில் முதல் நிகழ்ச்சி நடைபெற்றது. முழு நாளும் பல்வேறு நிகழ்ச்சிகள் இருந்தது. மக்களோடு சந்திப்புகள் இருந்தது. பிரதமந்திரியோடு ஒரு தனிப்பட்ட சந்திப்பும் நிகழ்ந்தது. பிறகு அவரின் சில அமைச்சர்களோடும் ஒரு சந்திப்பு நிகழ்ந்தது. மிகவும் நல்ல சூழலில் அவர்கள் எப்போதும் ஜமாஅத்திற்கு வழங்கிய ஒத்துழைப்பிற்கு நான் நன்றி தெரிவித்தேன். பிறகு அங்கு பாராளுமன்றத்தின் ஓர் அறையில் நிகழ்ச்சி நடைபெற்றது. அதில் கனடா அரசாங்கத்தின் **6** அமைச்சர்கள் கலந்து கொண்டனர். **57** தேசிய பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். **11** பல்வேறு நாடுகளின் தூதுவர்கள் கலந்து கொண்டனர். அமெரிக்க தூதரகத்தின் பிரஸ் செயலரும், லிபியா தூதரகத்தின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். அன்டோரிய்யா மாநிலத்தின் அமைச்சர்களும் கலந்து கொண்டனர். முப்பதிற்கும் அதிகமான முக்கியமானோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். அதில் Cheif of Staffs அமைச்சர்கள் கலந்து கொண்டனர். Fellowship Director –ம் கலந்து கொண்டார். Canadian Red Cross –ன் Cheif Communication Officer –ம் கலந்து கொண்டார். RCMP யின் Asst. Commissioner –ம் கலந்து கொண்டார். University of Ottawa மற்றும் மற்றொரு University –ன் பேராசிரியர்களும் கலந்து கொண்டனர். சில Deen –களும் Vice President –களும் கலந்து கொண்டனர். Canadian Counsil for Muslims –ன் Director –ம் கலந்து கொண்டார்கள். US அரசாங்கத்தின் சில பிரதிநிதிகளும், சில உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இவ்வாறு தங்களைத் தாங்களே சிறந்த முறையில் உலகின் விவகாரங்களை நடத்திச் செல்பவர்கள் என்று கருதக்கூடிய மக்களின் கூட்டம் கூடியிருந்தது. அங்கு இஸ்லாமிய போதனைகளின் ஒளியில் எடுத்துரைக்கும் வாய்ப்பு கிடைத்தது. மேலும் இதேபோன்று தமது பங்காக மக்களுக்கு காட்டக் கூடியவர்களுக்கு நான் கூறினேன். முஸ்லிம்களை மட்டும் குற்றம் சாட்டாதீர்கள். மாறாக, உங்களுடைய செயல்களையும் பாருங்கள். சில வேளைகளில் உங்கள் மூலமாகவும் குழப்பங்கள் ஏற்பட்டுள்ளன என்றும் கவனமூட்டினேன். எவ்வாறிருப்பினும் அதற்குப் பிறகு வந்த கருத்துக்களை இப்போது எடுத்துரைக்கின்றேன்.

Desaigro என்ற பாராளுமன்ற உறுப்பினர் கூறினார்: அஹ்மதிய்யா ஜமாஅத்துடைய இமாமின் சொற்பொழிவு எவ்வாறு நாம் மூன்றாம் உலகப் போரிலிருந்து தப்பிக்க முடியும் என்பது பற்றி அறிவுரைகளை உள்ளடக்கியதாக இருந்தது. இந்த அழிவிலிருந்து தப்பிப்பதற்கு நாம் ஒருவர் மற்றவருக்கு உதவ வேண்டும் என்பது தெளிவானதாகும். இந்த பெண்மணி கூறுகிறார்: இப்போது வழங்கப்பட்டிருக்கும் இந்த தூதுச் செய்தியை முழு உலகத்திற்கும் எடுத்துரைப்பது அவசியமானதாகும்.

பிறகு இன்னொரு பாராளுமன்ற உறுப்பினர் Kevin Waghn கூறினார்: குறைந்த வார்த்தைகளில் பல்வேறு தலைப்புகளில் ஒளியூட்டியுள்ளார்கள். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் தன்னுடைய உரையில் திருக்குர்ஆனுடைய பல்வேறு ஆதாரங்களை எடுத்து வைத்தார்கள். இது என்னை மிகவும் தாக்கத்திற்கு ஆளாக்கியது. குறிப்பாக மார்க்க அறிவு குறைவாக இருக்கக்கூடிய என்னைப் போன்றவர்களுக்கு மிகவும் மகிழ்ச்சி அளிக்கக் கூடியதாக இருந்தது. இதன் மூலமாக என்னுடைய அறிவும் அதிகமானது.

ஒவ்வொருவரும் தத்தமது சிந்தனைக்கேற்ப கருத்துக்களை எடுத்துள்ளனர். மேலும் அது தொடர்பாக கருத்தும் கூறியுள்ளனர். மேலும் நினைவில் வைத்திருக்கின்றனர்.

இதேபோன்று இஸ்ரேலின் தூதுவரும் அங்கு வந்திருந்தார். இவர் கூறுகிறார். அமைதிக்கு மிகவும் முக்கியமான தூதுச் செய்தியாகும். அனைத்து மார்க்கங்களும் எவ்வாறு ஒன்று மற்றொன்றிக்கு கண்ணியமளிக்க வேண்டும் என்பது தொடர்பாக தெரிய வந்தது. இன்று இஸ்லாம் தொடர்பான என்னுடைய சிந்தனை மாறி விட்டது. மேலும் அதன் மீதுள்ள கண்ணியமும் அதிகமாகி விட்டது. இந்த சொற்பொழிவை அச்சிட்டு வெளியிட வேண்டும். மேலும் அதிகம் அதிகமான மக்கள் வரை கொண்டு சேர்க்க வேண்டும். மக்கள் இந்த தூதுச் செய்தியை பின்பற்றினால் உலகின் அபாயத்திலும் அபாயமான பிரச்சனைகளுக்குக் கூட தீர்வு கிடைக்கும். எனக்கு இந்த சொற்பொழிவில் சகிப்புத்தன்மை பற்றிய கருத்துக்கள் மிகவும் பிடித்திருந்தது. மேலும் அனைத்து மக்களுடைய உரிமைகளும் வழங்கப்பட வேண்டும். அவர் முஸ்லிம்களாக இருந்தாலும் சரி, யூதர்களாக இருந்தாலும் சரி, அனைவர்களுடைய உரிமைகளும் வழங்கப்பட வேண்டும் என்றார்.

பிறகு Senior Immigration Judge மேலும் இந்த வருடம் சர் ஸஃபருல்லாஹ் கான் சாஹிப் விருதைப் பெற்ற பெண்ணுமான லூயிஸ் ஹார்பர் கூறினார்: மிகவும் தூய மொழியில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் நம்முடைய குறைகள் மற்றும் பலவீனங்களின் பக்கம் கவனமூட்டினார்கள். அத்தோடு மேற்கத்திய சமூகத்தின் பிரச்சனைகள் பற்றியும் எடுத்துரைத்தார்கள். மேலும் அவர்களின் செயல்களில் வஞ்சகத்தன்மையை காண முடிகிறது. சிறுபான்மையினரின் உரிமைகளை அவர்கள் செலுத்துவதில்லை என்றும் கூறப்பட்டது என்றார்.

ராஜ் சேனி என்கின்ற பாராளுமன்ற உறுப்பினர் கூறினார்: இஸ்லாம் அமைதியின் மார்க்கமாகும். எந்த முஸ்லிம்கள் இந்த தூதுச் செய்தியை பின்பற்றுவதில்லையோ அவர்கள் உண்மையான முஸ்லிம்கள் இல்லை என்றார்.

இதேபோன்று இன்னொரு பாராளுமன்ற உறுப்பினர் மஸ்கர் ஜவாஹிரி அநேகமாக ஏதோவொரு அரபு நாட்டைச் சார்ந்தவராக இருக்கலாம். இவர் கூறுகிறார். உலகில் அமைதி எவ்வாறு நிலைபெற முடியும் என்பது ஒரு மிகப்பெரிய அறைகூவலாகும். இதை இன்று நாம் தூதுச் செய்தியில் கேட்டோம். இதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்து தீர்வு காண வேண்டும். இன்னும் ஒரு சில அறைகூவலும் உள்ளன. பொருளாதார நெருக்கடி, தீவிரவாதம் இவை அனைத்திற்கும் நாம் கடின உழைப்புடனும் இணைந்து பணியாற்ற வேண்டியது உள்ளது.

பாராளுமன்ற உறுப்பினரான கிருஷ்டி டென்கன் சாஹிபா. இவர் அறிவியல் அமைச்சரும் ஆவார். இவர் கூறுகிறார்: என்னுடைய உள்ளத்தை தொட்ட விஷயமாவது, ஒருமுறை நண்பராகக் கூடியவர் எப்பொழுதிற்கும் நண்பராகி விடுகின்றார். சொற்பொழிவில் பல அம்சங்களை எடுத்துரைத்தார்கள். உதாரணமாக நீதி, நேர்மை, அமைதி, இளைஞர்கள், ஐக்கிய நாடுகள் சபை மேலும் நாம் அனைவரும் ஒன்றிணைந்து நலனிற்காக முயற்சி செய்ய வேண்டும் போன்றவைகள் சொற்பொழிவில் இருந்தன. கூறுகிறார்: அஹ்மதிய்யா ஜமாஅத் என்னைப் பொருத்தவரையில் ஒரு கருணையுள்ள குடும்பத்தைப் போன்றதாகும்.

இதேபோன்று நிக்கல்லோ டீ ஓரியோ என்ற பாராளுமன்ற உறுப்பினர் தனது கருத்தை இவ்வாறு வெளிப்படுத்துகின்றார்: சொற்பொழிவு மிகவும் சிறந்ததாக இருந்தது. அனைத்து உலக விவகாரங்களையும் சுருக்கமாக எடுத்துரைத்தார்கள். நீங்கள் மார்க்கத்தின் பின்னணியில் உலகத்திலுள்ள பிரச்சனைகளையும் எடுத்துரைத்தீர்கள். அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் ஒரு சிறந்த ஜமாஅத்தாகும். மார்க்க அமைப்புகளுக்கு மிகச் சிறந்த உதாரணமாகும். மார்க்க விவகாரங்களில் சகிப்புத்தன்மை இருக்க வேண்டும் என்று அன்னார் கவனமூட்டினார்கள். மேலும் கொடூரத்தின் விளைவு மேலும் கொடூரமாகவே இருக்கும். சகிப்புத்தன்மை போன்ற ஒரு பண்பையாவது மேற்கொண்டு விட்டால் நம்மால் மிகப்பெரிய மாற்றத்தை கொண்டு வர முடியும் என்றார்.

மேலும் கூறுகிறார்: அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் இமாம் இங்கு வந்து சம்பிரதாயமான ஒரு சில விஷயங்களைக் கூறிவிட்டு நன்றி தெரிவித்து விட்டு சென்று விடுவார்கள் என்று நான் கருதினேன். ஆனால் நான் இங்கு நிகழ்த்தப்பட்ட உரையைப் போன்று என்னுடைய வாழ்க்கையில் வேறு எங்கும் கேட்டது கிடையாது. அன்னார் முழு உலகமும் இன்று எதிர்கொள்ளும் பிரச்சனைகள் தொடர்பாக எடுத்துரைத்தார்கள். உதாரணமாக, காலநிலை மாற்றம், பொருளாதார பிரச்சனைகள், உள்நாட்டுப் போர் போன்றவற்றிற்கு அடிப்படை காரணம் நீதியற்ற தன்மை என்று கூறினார்கள். தற்காலத்துப் பிரச்சனைகளுக்கு தீர்வையும் கூறினார்கள். மேலும் மார்க்க விவகாரங்களில் தலையிடக் கூடாது என்றும் கூறினார்கள். ஆயுதங்கள் விற்றல், வாங்கல் இருக்கக் கூடாது. இந்த பணியை மேற்கத்திய நாடுகள் செய்து கொண்டிருக்கின்றது என்று கூறினார்கள்.

கூறுகிறார்: இந்த நிகழ்ச்சியில் கலந்து எனக்கு மிகவும் மகிழ்ச்சி ஏற்பட்டது. அமைதியைப் பற்றி பேசக்கூடிய ஒருவரின் பேச்சை கேட்க முடிந்தது. இவர்கள் முழு உலகத்திற்கும் எவ்வாறு இஸ்லாத்தை அறிமுகம் செய்து கொண்டிருக் –கிறார்களோ அதுவே சரியான வழிமுறையாகும் என்றார்.

ஜெர்மனின் தூதுவர் வர்னர் வயின்ட் கூறுகிறார்: அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் இமாம் வருங்காலத்தைப் படம் பிடித்துக் காட்டினார்கள். நாம் அனைவரும் அமைதியான ஓர் எதிர்காலத்தையே விரும்புகிறோம். இவர்களின் சொற்பொழிவிலிருந்து இஸ்லாம் அமைதியான மார்க்கமாகும் என்று தெரிய வந்தது. மேலும் நாம் அனைவரும் ஐரோப்பாவிற்கு வருபவர்களோடு இணைந்து வாழ முடியும். சொற்பொழிவின் முக்கிய அம்சமாக இருந்ததென்றால், நாம் அனைவரும் ஒன்றிணைந்து உலகின் நலனிற்காக பாடுபட வேண்டும். மேலும் பொதுமக்களுக்கு தனிப்பட்ட முறையில் தங்களுடைய வாழ்க்கையை கழிப்பதற்கான அனுமதி உள்ளது என்பதை உறுதிப்படுத்த வேண்டும் என்றார்.

அரசாங்கங்கள் மார்க்க விவகாரங்களில் தலையிடக் கூடாது என்று நான் கூறியிருந்தேன். சில விவகாரங்கள் உதாரணமாக தலையில் துணி அணிதல் அல்லது பள்ளிவாயில் போன்றவற்றில் கேள்விகள் எழுவதுண்டு. இது எப்படிப்பட்ட கேள்விகள் என்றால் இவைகள்தான் குழப்பத்தை ஏற்படுத்தும்.

இதேபோன்று ஒரு Cheif இமாம் மற்றும் Scholar ஆன முஹம்மது ஜப்பார் இவர் அநேகமாக ஓர் அரபு நாட்டிலிருந்து வந்தவர். இங்கு ஒரு பள்ளியின் இமாமாக உள்ளார். கூறுகிறார்: நான் ஒரு சுன்னத் ஜமாஅத் இமாம் ஆவேன். இந்த சொற்பொழிவு உலகில் அமைதிக்கான அடித்தளமிட்டுள்ளது என்று கூறுவதில் எனக்கு எவ்வித தயக்கமும் இல்லை. இன்று உலகிற்கு இந்த சொற்பொழிவு மிகவும் அவசியமாக உள்ளது. அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாமுடைய சொற்பொழிவு நுட்பமான ஞானங்கள் நிறைந்ததாக இருந்தது. அன்னார் எந்தவொரு அமைப்பை மட்டும் குற்றம் சாட்டவில்லை. மாறாக, இந்த நிம்மதியற்ற தன்மை அனைத்து பிரிவுகளின் பலவீனங்களின் காரணத்தினால் ஆகும். நாம் நம்முடைய குறைகளையும் பலவீனங்களையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். பிறகு நாம் முன்னேற்றத்தின் பக்கம் அடியெடுத்து வைக்க வேண்டும் என்று கூறினார்கள். இதில் தவறிழைக்காத எந்தவொரு மனிதரும் இல்லை என்கின்ற இஸ்லாமிய போதனைகளின் பக்கம் கவனமூட்டினார்கள்.

கூறுகிறார்: மிகவும் சிறந்த சொற்பொழிவாக இருந்தது. தேவையான அனைத்து விஷயங்களும் எடுத்துரைக்கப்பட்டது. மேலும் சட்டத்தை இயற்றுபவர்களுக்கு இதற்கு மாற்றான தீர்வுகளை எடுத்துக் கூறினார்கள். பிறகு இவர் கூறுகிறார்: இஸ்லாத்தின் கொள்கையை மிக அழகிய முறையில் எடுத்துரைத்தார்கள். மேலும் பல்வேறு கடினமான விஷயங்களையும் மக்களின் உணர்வுகள் புண்படாத வண்ணம் அழகிய நடையில் எடுத்துரைத்தார்கள்.

பிறகு இன்னொரு விருந்தாளி கார்னட் ஜீனஸ் கூறுகிறார்: தூதுச் செய்தி மிகவும் சிறப்பானதாக இருந்தது. எவ்வாறு மார்க்கமும் மார்க்கத் தலைவர்களும் அமைதியை நிலைநாட்டவும், தற்போதுள்ள பிரச்சனைக்கு தீர்வு காண முடியும் என்பது பற்றி கூறினார்கள். மேலும் எவ்வாறு ஆயுதங்கள் விற்பனையை கட்டுப்படுத்தி நாம் ஒருவர் மற்றவரோடு அமைதியான முறையில் இருக்க முடியும் என்பதையும் எடுத்துரைத்தார்கள். கூறுகிறார்: பொதுவாக நாம் ஒருவர் மற்றவரின் மீது குற்றம் சாட்டுகிறோம். ஆனால் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் எவ்வாறு மேற்கத்திய நாடுகளும் மற்றவர்களும் தத்தமது பங்களிப்பைச் செலுத்தியவாறு உலகின் நிலைமையை சீர்செய்ய முடியும் என்று கூறினார்கள்.

ஒரு சீக்கிய விருந்தினர் கூறினார்: ஒரு மேற்கத்திய பாராளுமன்றத்தில் வந்து உலகத்தின் நிம்மதியற்ற தன்மைக்கு மேற்கத்திய நாடுகளும் பொறுப்பாகும் என்று கூறினார்கள். உதாரணமாக, அன்னார் மேற்கத்திய நாடுகள் விற்கக்கூடிய ஆயுதங்கள் எவ்வாறு தீவிரவாதிகளின் கைகளுக்கு கிடைக்கின்றன என்பது தொடர்பாக எடுத்துரைத்தார்கள். மேலும் தீவிரவாதத்திற்கு செல்லும் கனடாவைச் சார்ந்தவர்களில் 20 சதவிகிதம் பேர் பெண்கள் ஆவர். அவர்கள் வரக்கூடிய தலைமுறையினரையும் இவ்வாறே வழி நடத்தவர் என்ற கருத்தையும் தெளிவுபடுத்தினார்கள். கூறுகிறார்: இதுபோன்ற விஷயங்களை நான் சிந்தித்துக்கூட பார்த்தது கிடையாது. இவர்கள் திருக்குர்ஆன் பற்றி பேசியதும் மிகவும் பிடித்திருந்தது. அதாவது நாம் நம்முடைய உடன்படிக்கை மற்றும் நம்மிடம் ஒப்படைக்கப்பட்டவற்றை பூர்த்தி செய்ய வேண்டும் என்ற போதனை பிடித்திருந்தது. மேலும் மிக அழகிய நடையில் ஆட்சியும் ஒரு நம்பி ஒப்படைக்கப்பட்ட பொருளாகும். அரசாங்க பொறுப்பாளர்கள் தம்முடைய இந்த உடன்படிக்கையை அதற்குரிய உரிமைகளை வழங்கியவாறு நிறைவேற்ற வேண்டும் என்றார்கள்.

மேலும் கருத்து தெரிவித்தவாறு இவ்வாறும் கூறினார்: முஸ்லிம் ஆலிம்கள் மக்களை வழிகெடுத்துள்ளார்கள். இதன் காரணமாக குழப்பம் அதிகமாகிக் கொண்டிருக்கிறது என்று அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் கூறினார்கள் எனக் கூறினார். மேலும் கருத்து சுதந்திரம் மற்றும் உரிமை சுதந்திரம் போன்றவற்றை நிலைநாட்டுபவர்கள் நாங்கள்தான் என்று வாதம் செய்யும் மேற்கத்தியவர்கள் தங்களுடைய வாதங்களின்படி செயல்படுத்திக் காட்டுங்கள் என்றும் அறைகூவல் விடுத்துள்ளார். மேலும் மார்க்க விவகாரங்களில் தலையிடாதீர்கள். உதாரணமாக, தலையில் துணி அணிவதில் கட்டுப்பாடு அல்லது வணக்கஸ்தளங்களில் கட்டுப்பாடு தொடர்பாக மிக அழகிய முறையில் மேற்கத்திய உலகிற்கு கவனமூட்டினார்கள்.

Parliament Hill –லில் நடைபெற்ற ஒரு சில உதாரணங்களை உங்கள் முன் எடுத்துரைத்தேன். இதுபோன்ற எண்ணற்ற கருத்துகள் கூறப்பட்டன. அதில் அமைச்சர்களும் மற்றவர்களும் அடங்குவர். Parliament உடைய மீடியா கவரேஜில் முதலில் பிரதம மந்திரி தன்னுடைய Tweet Account –ல் இன்று Ottwa –ல் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் கலீஃபா மிர்ஸா மஸ்ரூர் அஹ்மதை சந்தித்ததில் மகிழ்ச்சி என்று எழுதி புகைப்படத்தை இணைத்திருந்தார். பிறகு இது Tweet ஆகிக் கொண்டே இருந்தது. இவ்வாறு இந்த முழு நிகழ்ச்சியின் செய்தியும் பத்திரிகை மூலமாக நான்கு மில்லியன் மக்கள் வரை சென்று சேர்ந்தது.

இதேபோன்று Toronto –வில் ஐவானே தாஹிரில் Peace Symposium நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் 614 அஹ்மதி அல்லாதவர்களும் முஸ்லிம் அல்லாதவர்களும் கலந்து கொண்டனர். அதில் பல்வேறு பகுதியின் மேயர்கள், பத்திரிகை நிருபர்கள், பேராசிரியர்கள், வக்கீல்கள், பத்திரிகையாளர்கள், பல்வேறு துறைகளைச் சார்ந்தவர்கள் கலந்து கொண்டனர்.

பிரஸ்பெட்டேரியன் சர்ச்சின் பாதிரியார் கூறுகிறார்: இன்று Peace Symposium –ல் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாமின் சொற்பொழிவு என்னை மிகவும் தாக்கத்திற்கு ஆளாக்கியது. அவர்களுடைய தூதுச் செய்தி அமைதி, அன்பு மற்றும் நம்பிக்கை பற்றிய தூதுச் செய்தியாக இருந்தது. அதற்கு நிறம், இனம் அல்லது மேற்கு, கிழக்கு என்ற குறிப்பான ஒன்றோடு தொடர்பு இல்லை. மாறாக, அனைத்து உலகத்திற்கும் உரியதாகும். உலகில் பல்வேறு வகையான தவறான எண்ணங்களும், அச்சங்களும் பரவி இருக்கின்றது. அந்த அடிப்படையில் இந்த சொற்பொழிவு மிகவும் முக்கியமானதாகும். இந்த சொற்பொழிவு நம்மிடையே ஒத்த விஷயங்கள் நிறைய இருக்கின்றது. மேலும் வேறுபாடுகள் குறைவாகவே இருக்கின்றது என்பதை தெளிவாக்கியது. இது மிகப்பெரிய நற்செய்தியாகும். மக்கள் இதைக் கேட்பது அவசியமானதாகும்.

கிரேக் கெனடி என்கின்ற ஒரு விருந்தாளி இவருடைய சகோதரி சில காலம் முன் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். அவர் கூறுகிறார்: இன்று நான் எனது சகோதரியுடன் வந்துள்ளேன். ஏனென்றால் அவர் சிறிது காலத்திற்கு முன்தான் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டுள்ளார். மேலும் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் போதனைகள் என்ன? என்பதை பார்க்க விரும்பினோம். மேலும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாமின் சொற்பொழிவைக் கேட்டு எனது மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. ஏனென்றால் எனது சகோதரி இவ்வளவு அன்பு காட்டக்கூடிய, ஒத்துழைப்பு வழங்கக்கூடிய, மக்களுக்கு தொண்டாற்றக்கூடிய மக்களோடு இணைந்துள்ளார். இன்று நான் கற்ற விஷயங்களினால் நான் மிகவும் மகிழ்ச்சியடைந்துள்ளேன்.

இதிலும் அதாவது Peace Symposium –லும் அமைதியோடு ஜமாஅத் மனித குலத்திற்கு ஆற்றுகின்ற தொண்டுகள் பற்றி நான் எடுத்துரைத்திருந்தேன்.

இதே போன்று Nile Association –ன் தலைவரான முஹம்மது அல்ஹு நாஜி இவர் பாராளுமன்றத்திலும் வந்திருந்தார். அவர் கூறுகிறார்: நாம் அனைவரும் அன்போடு இருக்க வேண்டும் என்ற இன்றைய தூதுச் செய்தி மிகவும்

தெளிவானதாகவும் மேலும் நாம் எவரோடும் வெறுப்பு காட்ட வேண்டிய தேவையில்லை. மேலும் நாம் ஒருவர் மற்றவரோடு வெறுப்பு காட்டிக் கொண்டிருந்தால் ஒருபோதும் அமைதி நிலைபெற முடியாது.

அவர் கூறுகிறார்: நான் பாராளுமன்றத்தில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாமுடைய சொற்பொழிவைக் கேட்ட போது பாராளுமன்றத்தில் இவ்வாறு ஒரு முஸ்லிம் தலைவர் இவ்வாறு சொற்பொழிவாற்ற முடியுமா? என்று என்னால் நம்பவே முடியவில்லை. அச்சத்தின் எவ்வித சாயலும் தென்படவில்லை. மிகவும் துணிந்து தங்களது சொற்பொழிவை நிகழ்த்தினார்கள். இதுதான் இஸ்லாத்தின் உண்மையான மற்றும் சரியான போதனையாகும் என்ற நம்பகத்தன்மை மக்களுக்கு ஏற்பட்டது. நடந்து கொண்டிருக்கின்ற போர்களுக்குப் பின்னால் சிலர் அதன் மூலம் பலனடைந்து கொண்டிருக்கிறார்கள். பிறகு கூறுகிறார்: இன்றைய சொற்பொழிவிலும் எல்லாரிடத்தும் அன்பு, எவரிடமும் இல்லை வெறுப்பு தொடர்பாக பேசினார்கள். இதுவே நம்முடைய செயல் திட்டமாகவும் இருக்க வேண்டும். மேலும் இதுவே உண்மையும் ஆகும்.

பிறகு சமீத்தா சமூகத்தின் உறுப்பினர் அபு யூசுஃப் சாஹிப் கூறுகிறார்: இன்று நான் கேட்டது மற்றும் பார்த்ததன் விளைவாக மிகவும் தாக்கத்திற்கு ஆளாகியுள்ளேன். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் தனது சொற்பொழிவில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது பெரும்பாலான உதாரணங்களை எடுத்துக் கூறினார்கள். மேலும் அதன்படி செயல்படுவதன் பக்கம் நாம் அனைவரும் கவனம் செலுத்த வேண்டும் என்று கவனமூட்டினார்கள். மேலும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒருபோதும் வலுக்கட்டாயமாக எவரையும் இஸ்லாத்தில் நுழையச் செய்யவில்லை என்பதை பெருமானார் (ஸல்) அவர்களது முன்மாதிரியிலிருந்தே நிரூபித்தார்கள். மேலும் பெருமானார் (ஸல்) அவர்கள் எவ்வாறு மனித குலத்திற்கு தொண்டாற்றினார்கள் என்றும் எடுத்துரைத்தார்கள். மேலும் திருக்குர்ஆனை சான்று காட்டி அதாவது 'லா இக்ரஹ ஃபித்தீன் – அதாவது மார்க்கத்தில் எவ்வித பலவந்தமுமில்லை' என்ற இஸ்லாமிய போதனைகளையும் எடுத்துரைத்தார்கள். கிருத்தவராக இருந்தாலும் சரி, யூதராக இருந்தாலும் சரி, இந்துக்களாக இருந்தாலும் சரி அல்லது எந்த மார்க்கத்தைப் பின்பற்றுபவராக இருந்தாலும் சரி அவர்களின் உரிமைகளை வழங்கினார்கள். மனிதன் என்ற அடிப்படையில் நாம் அனைவரும் ஒன்றே என்றும் கவனமூட்டினார்கள்.

பிறகு மூன்றாவது நிகழ்ச்சி York University –ல் நிகழ்ந்தது. York University Canada –வின் மிகப்பெரும் பல்கலைக்கழகங்களில் ஒன்றாகும். இதில் **11** Facalties இருக்கின்றது. இதனுடைய Main Campus –ல் **53,000** –ற்கும் அதிகமான மாணவ மாணவிகள் கல்வி பயில்கின்றனர். இந்த University –ல் ஆசிரியர்களின் எண்ணிக்கை ஏறக்குறைய **7,000** ஆகும். இந்த University –யில் இருந்து இதுவரை ஏறக்குறைய மூன்று இலட்சம் மாணவ மாணவிகள் கல்வி பயின்று வெளியேறியுள்ளனர். Chansellor இடம் கேட்டபோது இது கனடாவின் மூன்றாவது பெரிய University என்று கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் கேட்கொரியர் என்ற ஒருவர் கலந்து கொண்டார். இவர் University of Toronto உடைய Indigenous elders –ன் உறுப்பினர் ஆவார். இவர் கூறுகிறார்: இன்றைய நாள் ஒரு அன்பளிப்பாகும். நாம் அனைவரும் ஒன்றிணைந்து உலக அமைதிக்காக பணியாற்றுகிறோம் என்பதைக் கேட்டு மிகவும் இன்பமாக இருந்தது. இவரின் கருத்து என்னவாக இருக்கின்றதென்றால், பழைய உள்ளூர்வாசிகளுக்கு அவர்களுடைய உரிமைகள் கிடைக்கவில்லை எனக் கருதுகின்றனர். எவர்களுடைய உரிமைகள் பறிக்கப்பட்டுள்ளதோ அவர்களுடைய உரிமைகள் வழங்கப்பட வேண்டும். இவர் கூறுகிறார்: அவர்கள் உலக அமைதிக்காக பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் அவர்கள் கூறியதெல்லாம் உள்ளத்தின் ஆழத்திலிருந்து கூறியதாகும். ஒருவர் உண்மையை உள்ளத்திலிருந்து கூறும்போது அது எப்போதும் நினைவில் இருக்கிறது. நாங்கள் எந்த தூதுச் செய்தியை விரும்புகிறோமோ அதை அவர்கள் உலகின் இன்னொரு பகுதியிலிருந்து வந்து கூறுகிறார்கள்.

பிறகு இதே போன்று ஒரு மாணவி ஷேரல்கிரஸ் கூறுகிறார்: இது ஒரு மிகவும் சிறப்பான சந்தர்ப்பமாக இருந்தது. எங்கள் அனைவருக்கும் இஸ்லாத்தின் உண்மையான போதனைகள் பற்றி தெரிய வந்தது. இப்போது எனக்கு இஸ்லாம் பற்றி ஓரளவு அறிவு கிடைத்திருக்கிறது. இப்போது நான் யூகத்தின் அடிப்படையில் நடக்கவில்லை. அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் அமைதி தொடர்பாக மிகவும் நல்ல கருத்துக்களை எடுத்துக் கூறினார்கள். இந்த விஷயங்கள் அதாவது நம்மிடையே போதனையின் அடிப்படையில் ஒத்தவையாக இருக்கின்றன என்று புரிய வைத்தார்கள். இது மிகவும் புகழுக்குரியதாகும். அதாவது எங்களுடைய மற்றும் ஜமாஅத்தின் அடிப்படைய விஷயங்களில் ஒன்றாக இது இருக்கிறது என்று கூறியது எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

இன்னொரு University –யின் Journalism துறையின் Prof. தன்னுடைய அனைத்து மாணவர்களையும் சொற்பொழிவைக் கேட்பதற்காக அனுப்பி வைத்திருந்தார்.

யாஸர் அல்பராமி என்ற ஒரு பத்திரிகையாளர் கூறுகிறார்: ஜமாஅத்தின் இமாம் அவர்கள் நம்மிடைய சமாதானத்தோடு இருக்க வேண்டும் என்று கூறிய விஷயம் மிகவும் பிடித்திருந்தது. ஒரு Journalist என்ற அடிப்படையில் நான் பெரும்பாலும் அமைதி மற்றும் பெண்களுக்கான உரிமைகள் தொடர்பாக எழுதுவதுண்டு. இவர் ஒரு பெண்மணி ஆவார். ஆனால் ஒரு மார்க்க தலைவர் இது தொடர்பாக பேசினால் அது ஒரு முக்கியம் வாய்ந்ததாக இருக்கின்றது. ஜமாஅத்தின் இமாம் மிகவும் தெளிவாக இஸ்லாமிய உலகத்தினுடைய பிரச்சனைகள் பற்றி எடுத்துக் கூறினார்கள். அதாவது அதன் பின்னால் பிற அரசாங்கங்களின் கை வரிசை உள்ளது என்பதை எடுத்துரைத்தார்கள். உலகத்திலுள்ள நிலைமைகளைப் பற்றி படிக்கும்போது தனக்கு மிகவும் துக்கம் ஏற்படுகிறது என்று அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் கூறியது மிகவும் பிடித்திருக்கிறது.

ஒரு பாதிரியார் கூறுகின்றார்: திருக்குர்ஆனிலிருந்து எடுத்துக் கூறப்பட்ட விஷயங்கள் மிகவும் எளிமையாக புரிந்து விட்டன. உலகில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற பல்வேறு போர்கள் ஏதேனும் ஒரு குறிப்பிட்ட ஆற்றலின் உதவியோடு அல்லது அவர்களின் தலைமையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. வல்லரசுகள் உதவி செய்வதை நிறுத்தி விட்டால் இவைகள் அனைத்தும் முடிவுக்கு வர இயலும் என்று கூறிய விஷயம் எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது.

பிறகு நாம் சிஸ்கடோன் சென்றிருந்தோம். Press Conference நடைபெற்றது. ஜமாஅத்துகளின் நிகழ்ச்சிகள் நடைபெற்றது. பொது மக்களோடு எந்த நிகழ்ச்சியும் நடைபெறவில்லை. இருப்பினும் Press மூலமாகவே மொத்தமாக **1.78** மில்லியன் மக்கள் வரை தூதுச் செய்தி சென்று சேர்ந்தது.

பிறகு Regina –வின் மஸ்ஜிது மஹ்மூதின் திறப்பு விழா இருந்தது. அங்கும் ஜுமுஆவிற்குப் பிறகு மாலை வேளையில் ஒரு Hotel –ல் Reception இருந்தது. இதில் **200** விருந்தினர்கள் கலந்து கொண்டனர். இதில் சிஸ்கடோன் மாநிலத்தின் முதலமைச்சரும், துணை முதலமைச்சரும், Regina City –யின் மேயரும், Public Safety Officer –ம், Opposition –ன் Deputy House Leader –ம், முன்னாள் மேயர்களும், University of Siskadon –ன் தலைவரும், துணை தலைவரும், University of Regina –வின் Religious துறையின் தலைவரும், பேராசிரியர்களும், பாதிரிகளும், காவல் துறையினரும், பல்வேறு துறையைச் சார்ந்தவர்களும் கலந்து கொண்டனர். உலக மார்க்கங்கள் பற்றிய கல்வியின் பேராசிரியர் Regina –வின் பள்ளிவாயில் திறப்பு விழாவின்போது ஆற்றிய சொற்பொழிவைக் கேட்ட பிறகு இது மிகவும் ஞானம் நிறைந்த உள்ளத்தை கவரக்கூடிய சொற்பொழிவாக இருக்கின்றது என்று கூறினார். நான் உலக மார்க்கங்களின் கல்வியின் பேராசிரியராக கேட்டதில் இந்த சொற்பொழிவு மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் அவர்களின் சொற்பொழிவு மிகவும் பிடித்திருந்தது. அன்னாருடைய தூதுச் செய்தி தூயதாகவும், நடைமுறைக்கு ஏற்றதாகவும் இருந்தது. கஷ்டங்களில் ஆழ்ந்திருக்கக்கூடிய ஏழைகளைக் கண்டு கொள்ளாமல் உலகில் அமைதியை நிலைநாட்ட முடியாது என்கின்ற இந்த தூதுச் செய்தி மிகவும் தெளிவானதாகும்.

பிறகு கூறுகின்றார்: தற்காலத்து நிலைமைகளின் காரணமாக உலகப் பிரச்சனைகளுக்கு இஸ்லாம் கூறும் தீர்வு தொடர்பாக மக்கள் தவறான எண்ணங்களில் சிக்கித் தவிக்கின்ற இவ்வேளையில் இவர்களின் தூதுச் செய்தி மிகவும் அவசியமானதாகும். மேலும் கூறினார்: அவர்கள் அந்த தவறான எண்ணங்களை அகற்றக்கூடிய பொறுப்பை ஏற்றுக் கொண்டார்கள். நம்முடைய இந்த Multi Cultural மற்றும் Multi Religious Socity –ல் சகோதரத்துவம், ஒற்றுமை, கண்ணியமளித்தல் போன்றவைகளுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

பிறகு சிஸ்கடோனின் சட்டப்பேரவையின் உறுப்பினர் பால் மேரிமேன் கூறினார்: அரசியல் மற்றும் உலக நிகழ்ச்சிகள் வேறுபட்டதாகும். அங்கு மக்கள் அழுத்தம் கொடுத்து தன்னுடைய கருத்துக்களை வெளிப்படுத்துவர். மேலும் மக்களின் மீது தாக்கத்தை ஏற்படுத்த முயற்சிப்பர். ஆனால், அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாமிடம் அப்படிப்பட்ட எதுவும் தென்படவில்லை. அவர்கள் மிகவும் அன்புடன் தன் பக்கம் அழைப்பதைப்போன்றும் அனைவரோடும் அன்பு செலுத்துவதற்கு தயாராக இருப்பதாகவும் எனக்குத் தோன்றியது. மார்க்கம் மற்றும் ஆன்மீகம் என்பது இதற்கே கூறுவர் என்று நான் கருதுகிறேன். அதாவது தன்னுடைய அக்கம் பக்கத்தினருடன் அன்பு கொள்வது மற்றும் உதவி செய்வதாகும்.

அங்கு நான் அக்கம் பக்கத்தினருடன் நடந்து கொள்வது தொடர்பான இஸ்லாமிய போதனைகளையும் எடுத்துக் கூறியிருந்தேன். இவர்கள் அதனை சுட்டிக் காட்டுகிறார்கள்.

பிறகு கூறுகிறார்: இப்படிப்பட்ட ஜமாஅத் ஒரு பள்ளிவாயிலை அதாவது இஸ்லாத்தின் உண்மையான போதனைகளை எடுத்துக் கூறக்கூடிய பள்ளிவாயிலைக் கட்டுவது மிகவும் அவசியமானதாகும். ஏனென்றால் சிஸ்கடோனின் அனைவரும் பல்வேறு மார்க்கங்களோடு தொடர்புடையவர்கள் ஆவர். அனைவரும் ஒருவர் மற்றவரோடு கண்ணித்தோடும் சகோதரத்துவத்தோடும் நடந்து கொள்ள வேண்டும் என்றார்.

பிறகு சிஸ்கடோனின் Leader Of Opposition Trent –ன் Wotherspoun கூறுகிறார்: ஒரு அழகிய சந்திப்பாக இருந்தது. அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாமுடைய தூதுச் செய்தி ஆற்றல் மிக்கதாகவும், அவசியமானதாகவும் இருந்தது. அன்னார் நம்முடைய மார்க்கங்களில் இருக்கக்கூடிய ஒத்த விஷயங்களை அடையாளம் காட்டினார்கள். மேலும் கனடாவின் அஹ்மதிகள் மனித குலத்திற்கு முன்னுரிமை அளிக்கக்கூடிய கொள்கைகளை முன்னெடுத்துச் செல்கின்றனர் என்று கூறினார்கள். நமக்கு எதை விரும்புகிறோமோ அதையே பிறருக்கும் விரும்ப வேண்டும் என்கின்ற அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் இமாமின் தூதுச் செய்தி நம் அனைவருக்கும் பொதுவானதாகும்.

பிறகு கூறுகிறார்: சகோதரத்துவம் மற்றும் அமைதி நிலவ வேண்டும் என்கிற தூதுச் செய்தி இருந்தது. பிறகு அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் நாம் அனைவரும் பின்பற்ற வேண்டிய விஷயங்களை நமக்கு அடையாளம் காட்டினார்கள். இவை நம்முடைய நகரம் Regina –வை மட்டுமோ அல்லது நம்முடைய மாநிலம் சிஸ்கடோனை மட்டுமோ அல்லாமல் நம்முடைய நாட்டையும் மாறாக முழு உலகத்தையுமே வலுப்பெறச் செய்யக் கூடியதாகும். Regina –வில் பள்ளிவாயிலின் திறப்பு விழாவிற்குப் பிறகு கிடைத்த Media Coverage போன்றவை பல்வேறு தொலைக்காட்சிகளில் வெளி வந்தது. ஒரு Press Conference –ம் நடந்தது. தனிப்பட்ட நேர்காணலும் நடைபெற்றது. TV, Radio, செய்தித்தாள்கள் மூலம் ஏறக்குறைய **(6,7 பல்வேறு ஊடகங்களைச் சார்ந்தவர்களும் இருந்தனர்) 1.97** மில்லியன் மக்கள் வரை இஸ்லாத்தின் தூதுச் செய்தி சென்றடைந்தது.

இதேபோன்று லைட் மினிஸ்டரில் மஸ்ஜிது பைத்துல் ரஹ்மானின் திறப்பு விழா இருந்தது. Regina –விற்குப் பிறகு இந்த விழா நடைபெற்றது. இது மிகவும் சிறிய பகுதியாகும். பெரும்பாலும் எண்ணெய் வியாபாரம் செய்யக் கூடியவர்கள் அங்கு செல்வதுண்டு. **49** ஜமாஅத் அல்லாத விருந்தினர்கள் Reception –ல் கலந்து கொண்டனர். இதில் சிஸ்கடோனின் சட்டப்பேரவை உறுப்பினரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களும், நகரின் மேயரும், அக்கம் பக்கத்து பகுதிகளின் மேயர்களும், கவுன்சிலர்களும், பேராசிரியர்களும், ஆசிரியர்களும், பத்திரிகையாளர்களும், வாழ்வின் பிற துறையைச் சார்ந்தவர்களும் கலந்து கொண்டனர். Immigration & Defence –ற்கான முன்னாள் அமைச்சர் Jeson kenny முன்பிருந்தே இவரோடு நமக்கு தொடர்பு இருக்கின்றது. எனக்கும் அவரோடு தனிப்பட்ட முறையிலும் தொடர்பு உள்ளது. அவரும் அங்கு வந்திருந்தார்.

அவர் கூறுகிறார்: அஹ்மதிய்யா ஜமாஅத் ஒரு சிறிய ஜமாஅத்தாகும். ஆனால் மிகவும் முன்னிலையில் பணியாற்றுகின்றது. மேலும் இஸ்லாத்தின் ஒளிமயமான முகத்தை உலகத்திற்கு எடுத்துக் காட்டுகின்றது. உலகின் இன்றைய நிலை மற்றும் தீவிரவாதம் பற்றிய தவறான எண்ணம் அதாவது இஸ்லாம் தீவிரவாதத்தை அனுமதிக்கின்றது என்று கருதப்படும் நிலையில் அஹ்மதிய்யா ஜமாஅத் பிரதி பிம்பத்தைப் போன்றதாகும். இது கனடாவின் கலாச்சாரத்தை மிகவும் ஒத்த இஸ்லாமாகும். மேலும் அமைதியின் உத்திரவாதமாகும்.

கூறுகிறார்: என்னைப் பொருத்தவரையில் பள்ளிவாயில் திறப்பு விழா மற்றும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாமின் சுற்றுப் பயணம் இந்த முழு பகுதிக்கும் அறிவை அதிகப்படுத்த காரணியாக இருக்கும். மேலும் மக்கள் முன் இஸ்லாத்தின் அழகிய தோற்றம் எடுத்துக் காட்டப்படும். பிறகு கூறுகிறார்: இன்றைய சொற்பொழிவில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் அவர்கள் இஸ்லாம் மற்றும் பள்ளிவாயில் தொடர்பாக மக்களின் உள்ளங்களில் எழக்கூடிய எல்லா எதிர்மறையான கருத்துக்களையும் களைந்தது. பள்ளியின் திறப்பு விழா ஒரு சிறந்த நிகழ்வாகும். மேலும் நம்முடைய மார்க்க சுதந்திரப் போதனைகளின் அடிப்படையிலேயே ஆகும். நம்மோடு இவருக்கு தொடர்பு இருக்கிறது என்று கூறினேன். லாஹூரில் தாருஸ் ஸிக்ர் மற்றும் மாடல் டவுனில் ஷஹாதத் நடைபெற்றபோது அப்போது அமைச்சராக இருந்த இவர்தான் முதன் முதலில் ஃபோனில் அனுதாபங்களை தெரிவித்தார். அதற்குப் பிறகு ஷஹீதுகளின் குடும்பங்கள் கனடாவில் குடியமர்த்துவதற்கு முயற்சி செய்வேன் என்றும் எனக்கு வாக்குறுதி அளித்திருந்தார். இந்த அடிப்படையில் அவர் தன்னுடைய வாக்குறுதியை நிறைவேற்றவும் செய்தார். அல்லாஹ்வின் அருளால் ஏறக்குறைய ஷஹீதுகளின் எல்லா குடும்பங்களும் அங்கு சென்று விட்டன.

நிகழ்ச்சியில் கலந்து கொண்ட இன்னொரு விருந்தாளி ஜான் கோர்மலே இவர் ரேடியோவில் ஒரு நிகழ்ச்சியின் தொகுப்பாளர் ஆவார். அவர் கூறுகிறார்: பள்ளிவாயிலின் பங்களிப்பு பற்றி முக்கியமான கருத்துக்களை எடுத்துக் கூறியுள்ளீர்கள். பிறகு என்னைப் பற்றி கூறியவாறு கூறுகிறார். பள்ளிவாயில் இறை வணக்கத்திற்காக மட்டுமல்ல. மாறாக, மனித குலம் ஒன்றிணைவதற்குமாகும். மேலும் அஹ்மதிய்யா ஜமாஅத் இது தொடர்பாக அதிகம் பணியாற்றிக் கொண்டிருக்கிறது என்றார். எப்போதெல்லாம் தீவிரவாதத் தாக்குதல் நடக்குமோ அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் எல்லோருக்கும் முதன்மையாக தங்களுக்குள் இருக்கக்கூடிய தொடர்பை அதிகப்படுத்துவதற்கும், பல்வேறு மார்க்கங்களை ஒன்றிணைப்பதற்கும் முயற்சி செய்கின்றது. பிறகு கூறுகிறார். தேசப்பற்று ஈமானின் ஒரு பகுதி என்பது இஸ்லாத்தின் போதனையாகும் என்பதையும் எடுத்துக் கூறினார்கள். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மக்கள் முழுமையாக சமூகத்தோடு இணைந்திருக்கின்றனர். எங்கெல்லாம் வசிக்கின்றார்களோ முழுமையான முறையில் மக்களோடு பிண்ணிப் பிணைந்து விட்டனர். ஜமாஅத் மக்கள் இருக்கின்ற இடங்களில் சமூகத்தை வலுப்படுத்தும் முயற்சியில் எப்போதும் இருந்து வருகின்றனர் என்றார்.

இதற்குப் பிறகு Calegary. இது பெரிய நகரமும் ஆகும். அங்குள்ள ஜமாஅத்தும் பெரியதாகும். நம்முடைய பள்ளிவாயிலும் மிகப்பெரியதும் அழகு வாய்ந்ததும் ஆகும். அங்கு நவம்பர் **11** ஆம் தேதி ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு Peace Symposium இருந்தது. அதில் ஏறக்குறைய **644** விருந்தினர்கள் கலந்து கொண்டனர். அந்த விருந்தினர்களில் ஒரு சில மாதங்களுக்கு முன்னர் மாறிய கனடாவின் முன்னால் பிரதமமந்திரியும் கலந்து கொண்டார். இப்போது புதிதாக ஒருவர் வந்துள்ளார். அல்பர்ட்டாவின் Human Services –ன் அமைச்சரும் கலந்து கொண்டார். Calegary –ன் முன்னாள் மற்றும் இந்நாள் மேயர்களும் கலந்து கொண்டனர். இதற்கு முன்னர் கூறப்பட்ட முன்னாள் அமைச்சரான ஜேஸன் கென்னியும் அங்கு வந்திருந்தார். University of Calegary –ன் Deen மற்றும் Vice Chansellor –ம் வந்திருந்தனர். சில அருகிலுள்ள பகுதிகளில் மேயர்களும், டெப்டி மேயர்களும் வந்திருந்தனர். ரெட்டியர் காலேஜின் அதிபரும், லெஜிஸ்லேட்டிவ் அஸம்பிளியின் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். மேலும் பிற துறைகளைச் சார்ந்தவர்களும் வந்திருந்தனர். **600** –க்கும் அதிகமானோர் வந்திருந்தனர். படித்தறிந்த மக்களின் ஒரு நல்ல ஒன்று கூடலாக அது இருந்தது.

கனடாவின் முன்னாள் பிரதம மந்திரி ஸ்டீஃபன் ஹார்பர் தனது கருத்துக்களை கூறியவாறு கூறினார்: அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் பல்வேறு இடங்களில் நிகழ்த்திய சொற்பொழிவுகளை நான் கேட்டுள்ளேன். அன்னார் எப்போதும் இஸ்லாத்தின் அமைதி நிறைந்த போதனைகளை உலகின் முன் எடுத்து வைத்தார்கள். என்னுடைய உரையைப் பற்றி கருத்து கூறியவாறு கூறினார். இன்று மாலையும் அதையே எடுத்துரைத்தார்கள். இதுவொரு மகத்துவமான தூதுச் செய்தியாகும். இது அவர்களுடைய ஜமாஅத்தின் அனைத்து உறுப்பினர்களின் பிரதிபிம்பமுமாகும்.

பிறகு கூறுகிறார்: என்னைப் பொருத்தவரையில் ஜமாஅத்தினுடைய இமாமின் குறிப்புகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஒவ்வொருவரும் இதை கேட்க வேண்டிய தேவையுள்ளது. ஏனென்றால் இன்றைய காலகட்டத்தில் தீவிரவாதத்தை விரும்பக்கூடியவர்கள இஸ்லாத்தை அவப்பெயருக்கு உள்ளாக்குகின்றனர். பொது மக்கள் இது தான் இஸ்லாம் என்று கருதுகின்றனர்.

பிறகு கூறுகிறார்: இஸ்லாம் என்றாலே அமைதி தான். பிறகு கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் இஸ்லாம் என்றால் அமைதி என்றும் இஸ்லாம் என்றால் அல்லாஹ் மற்றும் அவனது படைப்புகளோடு அன்பு காட்டுதல் என்பதை எடுத்துக் காட்டினார்கள். பிறகு கூறுகிறார். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் உலகின் அனைத்து பிரச்சனைகளையும் குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளில் நிலவக்கூடிய பிரச்சனைகள் தொடர்பாக மிகவும் நுட்பமான ஞானத்தோடு வெளிச்சமூட்டினார்கள். பிறகு இவர் கூறுகிறார். இதுவொரு மிகவும் கடினமான ஒரு விஷயமாகும். ஆனால் அன்னார் அதை மிகவும் ஞானத்தோடு இதை விவாதித்துள்ளார்கள்.

மேலும் கூறினார்: நான் இவர்கள் அனைவருக்கும் அறிவுறுத்துவது என்னவென்றால் அவர்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் சொற்பொழிவை கேட்கவில்லை என்றால் கண்டிப்பாக அதை கேட்க வேண்டும்.

இதே போல் Calegary –ன் மேயர் நஹீத் நேன்ஸி சாஹிப் கூறுகிறார்: மிகவும் சிறப்பான சொற்பொழிவாக இருந்தது. மிகவும் துணிச்சலோடு இஸ்லாத்தின் அமைதி நிறைந்த போதனைகளை எடுத்தரைத்தார்கள். மேலும் இஸ்லாத்தில் எவ்வித தீவிரவாதத்திற்கும் இடமில்லை என்றும் கூறினார்கள். முஸ்லிம்களின் பிரதிநிதித்துவத்தில் இப்படிப்பட்ட விஷயங்களைக் கேட்பது மிகவும் மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும்.

பிறகு University of Calgary –ன் பேராசிரியர் தனது மனைவியோடு வந்திருந்தார். இவர் கூறுகிறார்: அமைதிக்கான இந்த தூதுச் செய்தி மிகவும் முக்கியமானதாகும். அடிப்படையில் நாங்கள் ஜெர்மனியர்கள் ஆவோம். Unknown is Unloned என்று ஒரு பழமொழி உள்ளது. அதாவது எதைப் பற்றிய அறிவு இல்லையோ அதை எவ்வாறு நேசிக்க முடியும். இதே நிலைமை தான் இஸ்லாத்திற்கும் ஆகும். அதாவது இஸ்லாத்தைப் பற்றி எங்களுக்கு தெரிய வருகிற போது அது எங்களுக்கு நல்லதாக தோனுகிறது. இன்று எங்களுக்கு ஜமாஅத்தின் இமாமுடைய சொற்பொழிவை கேட்ட வாய்ப்பு கிடைத்தது. இன்றிலிருந்து நாங்கள் இஸ்லாத்தை சிறந்த முறையில் புரிவோம். மேலும் முன்பை விட அதிமகாக இஸ்லாத்தின் மீது நேசம் கொள்வோம் என்றார்.

பிறகு அல்பெர்ட்டா கட்சியின் தலைவர் மேலும் அல்போவினுடைய சட்டப்பேரவையின் உறுப்பினர் கிரண் கிளார்க் கூறினார்: உங்களுடைய தூதுச் செய்தி மிகவும் தாக்கத்திற்கு உள்ளாக்கக் கூடியதாகும். காலத்திற்கேற்ற மற்றும் உலகின் நிலைமைக்கு ஏற்ற தூதச் செய்தியாக இருந்தது. இஸ்லாம் அரு அமைதியான மார்க்கமாகும் என்று Calegary மற்றும் கனடாவின் மக்களுக்கு தெரிய வந்துள்ளது. இந்த விஷயத்தை நாம் மற்றவர்கள் வரையிலும் எடுத்துச் செல்ல வேண்டும். உண்மையும் இதுவேயாகும்.

பிறகு பிராயன் லிட்டர் சீஃப் தனது கருத்தை இவ்வாறு கூறுகின்றார்: ஜமாஅத்தின் இமாம் அமைதியை நிலைநாட்டுவதையே தன்னுடைய சொற்பொழிவின் மையக் கருத்தாக வைத்திருந்தார்கள். இது மிகவும் சிறந்த நடையாகும். நான் இஸ்லாத்தைப் பற்றி மிகவும் குறைவாக அறிந்திருந்தேன். மேலும் அஞ்சி வந்தேன். ஊடகங்களுடைய எதிர்மறையான செய்தியின் காரணமாக குழம்பி இருந்தேன். உண்மையிலேயே திருக்குர்ஆன் குழப்பத்திற்கான போதனைகளை தருகிறதா? என்று சிந்தித்து வந்தேன். இன்று இறுதியில் எனது கேள்விகளுக்கான பதில் கிடைத்து விட்டது. ஜமாஅத்தின் இமாம் திருக்குர்ஆனுடைய ஆதாரங்களை எடுத்து வைத்து இஸ்லாம் அமைதியின் மார்க்கமாகும் என்பதை நிரூபித்தார்கள். இதற்கு முன்னர் பயணங்களின் போது ஏதேனும் மத்திய கிழக்கு நாடுகளைச் சார்ந்தவர்களை சந்தித்தால் அவர்கள் தீவிரவாத தாக்குதல் நடத்தி விடுவார்களோ என்று அஞ்சி வந்தேன். ஆனால் இன்று இஸ்லாமிய போதனைகளைக் கண்டு அஞ்சவேண்டிய தேவையில்லை என்பது தெரிய வந்துள்ளது என்றார். ஜமாஅத்தின் இமாம் அவர்கள் வழங்கிய தூதுச் செய்தி நமக்கு மிகவும் தேவையுள்ளதாக இருக்கிறது. ஏனென்றால் உலகில் அதிகமாக குழப்பம் உருவாகி விட்டது. மேலும் ஜமாஅத்தின் இமாம் நாம் வெறுப்பை அனுதாபம் மற்றும் நேசத்தைக் கொண்டு எதிர்கொள்ள வேண்டும் என நம் அனைவருக்கும் கூறினார்கள் என்றார்.

கேல்ரி சாஹிபா என்ற ஒரு பெண்மணி வந்திருந்தார். அவர் கூறுகிறார்: நான் இவ்வளவு முக்கியமான நிகழ்ச்சியில் கலந்து கொள்ளப் போகிறேன் என்று எண்ணிக்கூட பார்க்கவில்லை. கண்டிப்பாக கலந்து கொள்ள வேண்டும் என்று என்னை அழைத்த என்னுடைய நண்பரை சந்தோஷப்படுத்துவதற்காகவே நான் இங்கு வந்தேன். இவர் படித்தறிந்த ஒரு பெண்மணி. கூறுகிறார். ஆனால் நான் இங்கு வந்ததில் மகிழ்ச்சி அடைகின்றேன். எல்லா இடமும் நேர்மறையான சிந்தனையுள்ள இதுபோன்ற நிகழ்ச்சிகளை நான் இதுவரை கண்டதில்லை. ஜமாஅத்தின் இமாமின் தூதுச் செய்தி மிகவும் மேன்மையானது. மேலும் எல்லா சமுதாய இனத்தைச் சார்ந்த, நிறத்தைச் சார்ந்தவர்களையும் அது வரவேற்கிறது என்கின்ற செய்தி என்னைப் போன்ற குறைமதியுடையவர்களுக்கும் மிக எளிதாக புரிந்தது. ஆக, ஒருபோதும் நாம் இஸ்லாமியர்களைக் கண்டு அஞ்சவேண்டிய தேவையில்லை. முஸ்லிம்களை இன்னும் நல்ல முறையில் அறிய முயற்சி செய்ய வேண்டிய தேவையுள்ளது. பிறகு கூறுகிறார். இங்கு எடுத்து வைக்கப்பட்ட முஸ்லிம் அல்லாதவர்களின் மேற்கோள்கள் அதாவது அங்கு நான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொடர்பாக அதாவது அன்னார் எவ்வாறு அமைதியை நிலைநாட்டினார்கள், அன்னாரின் சகிப்புத் தன்மை எவ்வாறு இருந்தது என்பது தொடர்பாக Orientelist Stanly போன்றோர்களின் மேற்கோளை எடுத்துக் கூறியிருந்தேன். அவைகள் மிகவும் எனக்குப் பிடித்திருந்தது என்று கூறினார். அதாவது எவ்வாறு அவர்கள் தங்களது கருத்தை தெரிவித்தவாறு இஸ்லாத்தின் தூதுவரை அமைதியை விரும்புபவராக நிரூபித்துள்ளார்கள் என்பது பிடித்திருந்தது. அறிமுகம் இருந்ததன் காரணமாக இவரை இந்த நிகழ்ச்சிக்கு அழைத்து வந்திருக்கிறார்கள். ஆனால் அஹ்மதிகளும் நினைவில் கொள்ள வேண்டும். எவர்களோடு அறிமுகம் இருக்கின்றதோ அவர்களுக்கு இஸ்லாத்தின் அழகிய போதனைகளையும் எடுத்துக் கூற வேண்டும். இவ்வாறு மெதுவாக பேசி பேசித் தான் தப்லீகின் வழிகள் திறக்கும். பொதுவான உலக விஷயங்களை மட்டும் பேசி விட்டு இஸ்லாத்தைப் பற்றி எதுவுமே தெரியாமல் இருந்த விடக்கூடாது. இவர்களுக்கு தன்னுடைய நண்பருக்காக நிகழ்ச்சியில் பங்குபெற வேண்டும் என்ற எண்ணம் வந்திருக்கிறது. ஆனால் அந்த அஹ்மதியோ தனது இந்த நண்பருக்கு இஸ்லாத்தைப் பற்றி எதுவுமே கூறவில்லை. இது தொடர்பாகவும் நமது இளைஞர்களும், இளைஞிகளும் கவனம் செலுத்த வேண்டும்.

Calegary Police –ன் ஒரு அதிகாரி பாப் ரிஷர் கூறுகிறார்: சொற்பொழிவு மிகவும் உள்ளம் கவரக்கூடியதாக இருந்தது. ஜமாஅத்தின் இமாம் இஸ்லாம் எவ்வாறு Multi Culturalism –ஐ வளர்க்கிறது என்று கூறினார்கள். நம்முடைய சமூகத்திற்கு இது மிகவும் அவசியமானதாகும். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் எல்லாரையும் ஒன்றாக இணைக்கின்றார்கள். மேலும் உலக மார்க்கங்களுக்கு இடையேயான பேச்சு வார்த்தையை முன்னெடுத்துச் செல்கின்றார்கள். ஜமாஅத்தின் இமாமின் சொற்பொழிவு என்னுடைய உள்ளத்தை தொட்டு விட்டது. அன்னார் உலக பிரச்சனை பற்றி கூறி அதற்கு என்ன தீர்வு என்றும் கூறினார்கள். மேலும் அன்னார் இஸ்லாம் அமைதியின் மார்க்கமாகும். முஸ்லிம்களுக்கு எந்நிலையிலும் சமாதானத்திற்காக கையை நீட்ட வேண்டும். எதிர் தரப்பினரின் எண்ணம் தவறாக இருந்தாலும் சரியே என்று திருக்குர்ஆனுடைய ஆதாரங்களை எடுத்து வைத்து நிரூபித்தார்கள்.

ஒரு பெண் விருந்தினர் கூறுகிறார்: இவர் பெயர் அனில் அலி யான் சாஹிபா ஆகும். கூறுகிறார். ஜமாஅத்தின் இமாம் முன்னாள் பிரதம மந்திரியின் முன்னால் மேற்கத்திய உலகம் நீதியை கடைபிடிக்க வேண்டும் என்று கூறினார்கள். மேலும் உலக பிரச்சனைகளில் தனக்கு என்ன பங்கு என்று சிந்திக்க வேண்டும் எனவும் கூறினார்கள். உலகப் பிரச்சனைகளுக்கு ஒருவரின் மீது மட்டும் குற்றத்தை சுமத்துவது சரியானது கிடையாது என்று ஜமாஅத்தின் இமாம் மிகச் சரியாக சொன்னார்கள்.

Indigenous Communitty இவர்கள் கனடாவின் பழைய உள்ளூர்வாசிகள் ஆவர். இவர்கள் தத்தமது கோத்திரங்களில் வசிக்கின்றனர். நகரங்களுக்கும் வருகின்றனர். அவர்களில் ஒருவர் லீ குரூ ஷீல்ட் ஆவார். கூறுகிறார். எனக்கு மிகவும் பிடித்திருந்தது. ஜமாஅத்தின் இமாம் மிகவும் உண்மையை வெளிப்படுத்தியவாறு அதாவது இஸ்லாம் தீவிரவாதத்தை போதிக்கிறது என்று இஸ்லாத்தின் மீது செய்யப்படக்கூடிய ஆட்சேபனையை எதிர்த்தார்கள். மேலும் ஜமாஅத்தின் இமாம் இஸ்லாத்தின் வேதத்திலிருந்து அதாவது திருக்குர்ஆனில் இருந்து இந்த ஆட்சேபனைகள் தவறாகும் என நிரூபித்ததும் பிடித்திருந்தது. பிறகு கூறுகிறார். ஜமாஅத்தின் இமாம் மேற்கத்திய நாடுகள் மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஆயுதங்களை வழங்கி வருகின்றனர் என்று கூறியதும் மிகவும் சரியானதாகும். ஜமாஅத்தின் இமாம் இஸ்லாமிய போர்களின் நுட்பமான ஞானம் பற்றி கூறி ஒரு வாக்கியத்தை கூறினார்கள். அதாவது To Stop the Hand of oppression என்று கூறினார்கள். அதாவது, எதிரியிடமிருந்து தன்னை தற்காத்துக் கொள்ள நடைபெற்ற போர்கள் என்று கூறினார்கள்.

அவர் கூறுகிறார்: இந்த வாக்கியம் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. இதை எப்போதும் நினைவில் வைப்பேன். அதாவது போர்கள் To Stop the Hand of oppression ற்கான நடைபெற்றது. பிறகு கூறுகிறார். உங்களுடைய கலீஃபா அநீதி மற்றும் கடினம் காட்டுதலை மிகச் சிறந்த முறையில் புரிகின்றார்கள். எனவே எங்களது கஷ்டங்களை கலீஃபா சிறந்து முறையில் புரிவார்கள் என நான் நம்புகிறேன். இவர்களில் பல்வேறு கோத்திரங்கள் இருக்கின்றது. 10 தலைவர்கள் அங்கு வந்திருந்தார்கள். அவர்களோடும் சந்திப்பு இருந்தது. இங்கும் இன்ஷா அல்லாஹ் தப்லீக்கின் நிகழ்ச்சிகளுக்கான ஏற்பாடுகள் செய்யப்படும். தப்லீக்கிற்கான வழிகளும் பிறக்கும்.

Calegary –ல் பல்வேறு TV மற்றும் பல்வேறு செய்திச் சேனல்கள், ரேடியோ மற்றும் மீடியா மூலமாக கிடைத்த கவரேஜ்களில் 8,10 தொலைக்காட்சிகள் செய்தியை வெளியிட்டன. தேசிய அளவிலான பெரிய செய்தித்தாழ்களும் அடங்கும். இவ்வாறு Calegary –யில் நடந்த நேர்காணல் மற்றும் Press Conference மூலமாக ஐந்து மில்லியன் மக்கள் வரை தூதுச் செய்தி எட்டியது. கனடாவின் சுற்றுப் பயணத்தின் போது மொத்தமாக கிடைத்த மீடியா கவரேஜில் 32 தொலைக்காட்சி சேனல்கள் ஐந்து மொழிகளில் நிகழ்ச்சிகளை ஒளி பரப்பினர். இதன் மூலமாக 40 மில்லியன் மக்கள் வரை தூதுச் செய்தி எட்டியது. ஆறு மொழிகளில் பல்வேறு ரேடியோ நிலையங்கள் மூலம் 30 செய்திகள் ஒலி பரப்பப்பட்டன. இதன் மூலம் 8 லட்சம் பேர் வரை தூதுச் செய்தி எட்டியது. மொத்தமாக 227 செய்தித்தாள்களில் 12 பல்வேறு மொழிகளில் செய்திகள் வெளி வந்தன. நேர்காணல் வெளி வந்தது. இதன் மூலமாக 4.8 மில்லியன் மக்கள் வரை தூதுச் செய்தி எட்டியது. பிறகு Social Media & Electornic Media மூலமாக 14.6 மில்லியன் மக்கள் வரை தூதுச் செய்தி எட்டியது.

இவ்வாறு மொத்தமாக அங்குள்ள மக்களின் கணிப்பின்படி அனைத்து வழிவகைகளையும் ஒன்றினைத்து பார்க்கும் போது 60 மில்லியனுக்கும் மேற்பட்டோர் வரை தூதுச் செய்தி சென்றடைந்துள்ளது. அல்ஹம்துலில்லாஹ். இது அல்லாஹ்வின் அருளாகும். இந்த அருளுக்கு நாம் மதிப்பளிக்க வேண்டும். மேலும் இதை பாதுகாக்கவும் வேண்டும். குறிப்பாக கனடாவின் அஹ்மதிகள் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். அதன் மூலம் அல்லாஹ்வின் அருள் மேலும் அதிகமாக வேண்டும். நம்முடைய அனைத்து பணிகளிலும் அஹ்மதிய்யத் மற்றும் உண்மையான இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எட்ட வைக்க வேண்டும் என்ற எண்ணம் இருக்க வேண்டும். ஏகத்துவத்தை உலகில் நிலைநாட்டும் எண்ணம் இருக்க வேண்டும். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கொடியை உலகில் பறக்கவிடும் எண்ணம் இருக்க வேண்டும் என்பதை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். அவ்வாறிருக்கும் என்றால் அல்லாஹ் நம்முடைய பணிகளில் அருள் செய்வான். அல்லாஹ் நமக்கு இதற்கான நல்வாய்ப்பினை வழங்குவானாக!

இப்போது நான் Peace Village –ல் இருக்கக் கூடியவர்களுக்கும் Abode of Peace –ல் இருப்பவர்களுக்கும் இங்கு பெரும்பாலார் அஹ்மதிகள் ஆவர். ஏறக்குறைய 99 சதவிகிதம் பேர் அஹ்மதிகள் ஆவர். அந்த அஹ்மதிகளிடமும் நான் கூறுவது என்னவென்றால் அங்கு அஹ்மதி சூழலை உருவாக்குங்கள். அதை நிலைநாட்டுங்கள். மேலும் அதிகம் அதிகமாக சரியான இஸ்லாத்தின் முன்மாதிரியை நிலைநாட்டுபவர்களாக இருப்பதற்கு நீங்கள் முயற்சி செய்ய வேண்டும். மேலும் நான் அங்கிருக்கும் போது எவ்வாறு கிலாஃபத்தோடு கலப்பற்ற தன்மையையும் நன்றியுணர்வையும் வெளிப்படுத்தினீர்களோ இனிமேலும் அதை அதிகரிக்கக் கூடியவர்களாக இருப்பீர்களாக. மேலும் முன்னேறிச் செல்லுங்கள். மேலும் நாம் அல்லாஹ்வோடு தொடர்பை ஏற்படுத்த வேண்டும் என்கின்ற அசல் நோக்கத்தை மறந்து விட வேண்டாம். மேலும் அவனை வணங்குவதில் நாம் ஒருபோதும் சோம்பேறித்தனமாக இருந்து விடக்கூடாது. அவர்களுக்கும், உங்களுக்கும், எனக்கும், அனைவருக்கும் அல்லாஹ் இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக!

★ ★ ★ ★ ★

# ஜுமுஆ பேருரை

அறிவார்ந்த ரீதியில் பிறரை தாக்கத்திற்கு உள்ளாக்குவது மட்டும் நமது பணியல்ல. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நோக்கத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு இஸ்லாமிய போதனைகளை நமது செயல் முன்மாதிரிகளாக வெளிப்படுத்திக் காட்டுவது அவசியமாகும். இந்த இஸ்லாமிய கட்டளைகளை செயல்படுத்திக் காட்டுவதற்கு நம்மிடத்தில் ஆட்சி அதிகாரம் இல்லை. அந்த நேரம் வருகின்ற போது இன்ஷா அல்லாஹ் உயர்மட்ட அளவிலும் அந்த முன்மாதிரிகளை நமக்கு வெளிப்படுத்த நேரிடும். ஆனால் இப்போது ஜமாஅத் அளவிலும் சமூக அளவிலும் இந்த முன்மாதிரிகளை நாம் நிலைநாட்டுவது அவசியமாகும்.

ஒவ்வோர் அஹ்மதியிடமும் நான் கூறுவேன். குறிப்பாக நான் ஜமாஅத் பொறுப்பாளர்களிடம் கூறுவேன். அவர்கள் ஒவ்வொருவரும் தங்களைத் தானே ஆய்வு செய்ய வேண்டும். அவர்கள் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட அமானிதங்களுக்குரிய உரிமைகளை எந்த அளவிற்கு சரியாக நிறைவேற்றி அவர்கள் நீதியில் நிலைநிற்கின்றார்கள் என்பதை அவர்கள் ஆராய வேண்டும். அவர்களின் ஒவ்வொரு தீர்ப்பும் நீதியின் உயர் தரத்தை வெளிப்படுத்தக் கூடியதாக இருக்க வேண்டும். சில பொறுப்பாளர்கள் பற்றி அல்லது எவர்களிடம் முறையான பொறுப்புகள் ஒப்படைக்கப்படாவிட்டாலும் எவர்கள் சில தொண்டுகளை ஆற்றி வருகின்றனரோ அவர்களைப் பற்றி மக்களுக்கு சில முறையீடுகள் உள்ளன. அதாவது அவர்கள் நீதியுடன் செயல்படுவதில்லை.

பொதுச் செயலர் மற்றும் அவரது அலுவலகத்தில் பணிபுரியக்கூடிய ஒவ்வொரு ஊழியர்களின் பணி என்னவென்றால் அலுவலகத்திற்கு வரக்கூடிய ஒவ்வொருவரிடமும் கண்ணியமாக நடந்து கொள்ள வேண்டும். தனக்கு விருப்பமான மற்றும் தன்னுடைய நண்பர்களிடம் ஒரு விதமாகவும், தான் அறியாத அல்லது எவர்களுடன் சுமூக உறவு இல்லையோ அவர்களுடன் ஒரு விதமாகவும் நடந்து கொள்ளக் கூடாது. இந்த விஷயத்தை மற்ற துறைகளின் மேலதிகாரிகளும் கண்காணிக்க வேண்டும். எவர்களெல்லாம் மக்கள் விவகாரங்களை கையாளுகின்றார்களோ அவர்கள் அனைவரும் கருத்தில் கொள்ள வேண்டும். தம்முடன் பணி செய்யக்கூடிய ஒவ்வொரு ஊழியரும் நீதியின் எதிர்பார்ப்புகளை முழுமை செய்தவாறு தமது பணியை செய்கின்றார்களா? இல்லையா? என்பதை ஆராய வேண்டும்.

நான் தலைமையக பொறுப்பாளர்களுக்குத் தான் இவற்றை கூறிக் கொண்டிருக்கின்றேன் என்று எவரும் நினைத்து விட வேண்டாம். மாறாக, தலைவர்களுக்கும் மற்றும் அவர்களின் செயற்குழு உறுப்பினர்களுக்கும் கூட நான் கூறுகின்ற இந்த விஷயங்கள் பொருந்தும். அவர்கள் தம்மைத் தாமே ஆய்வு செய்ய வேண்டும். நாம் நீதியின் எதிர்பார்ப்புகளை முழுமை செய்கின்றோமா? என்று அவர்கள் பார்க்க வேண்டும்.

எங்கு தவறுகள் நடக்கின்றதோ அங்கு தவறுகளை மறைப்பதற்கு சாக்குப் போக்குகளை தேடுவதற்கு பகரமாக இஸ்திஃபார் செய்தவாறு தன்னை சீர்படுத்திக் கொள்வதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

குறிப்பாக ஒவ்வொரு பொறுப்பாளரும் பொதுவாக, ஒவ்வோர் அஹ்மதியும் உலகின் முன்னிலையில் ஒரு முன்னுதாரணமாக திகழ வேண்டும். உலகில் எங்கு குழப்பங்கள் மற்றும் சண்டை சச்சரவுகள் மற்றும் நிம்மதியின்மை, பிறரின் உரிமைகளை பறிக்கின்ற முன்னுதாரனங்கள் காணக் கிடைக்கின்றதோ அங்கு நீதி மற்றும் பிறரின் உரிமைகளை வழங்குதலின் முன்னுதாரணங்கள் ஜமாஅத்தில் தென்பட வேண்டும்.

நாம் பைஅத் உடன்படிக்கையின்போது நாம் எல்லா தீமைகளிலிருந்தும் விலகி இருப்போம் என்று உடன்படிக்கை செய்திருக்கின்றோம் என்பதை ஒவ்வொரு அஹ்மதியும் நினைவில் கொள்ள வேண்டும். உடன்படிக்கைகளை பேணாமல் இருப்பதும், வேண்டுமென்றே அதன்படி செயல்படாமல் இருப்பதும் நம்பிக்கை துரோகமாகும்.

இன்று உலகில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் மட்டும் தான் ஜமாஅத் என்று அழைக்கப்படுகிறது. உலகில் இந்த ஒரு ஜமாஅத் தான் ஜமாஅத்தாக அடையாளம் காணப்படுகிறது. இதைத் தவிர்த்து உலகில் உலகளாவிய ஜமாஅத் என்று எந்த ஜமாஅத்தும் இல்லை. முழு உலகிலும் ஒரே ஜமாஅத்தாக அறியப்படுகின்ற எந்த ஜமாஅத்தும் இல்லை. எனவே அப்படிப்பட்ட இந்த ஜமாஅத்துடன் இணைந்திருப்பதும், ஜமாஅத் அமைப்பின் அங்கமாக இருப்பதும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழிகாட்டலுக்கேற்ப ஒருவரை உண்மையான முஸ்லிமாக ஆக்குகின்றது. ஒவ்வோர் அஹ்மதியும் இந்த விஷயத்திற்காக எவ்வளவு நன்றி கூறினாலும் அது குறைவு தான். கிலாஃபத் மற்றும் ஜமாஅத் அமைப்பிற்கு முழுமையாக கட்டுப்படுவதுதான் நீங்கள் தெரிவிக்கின்ற உண்மையான நன்றியாக இருக்கும்.

சிரியாவைச் சார்ந்த மதிப்பிற்குரிய அத்னான் முஹம்மது குர்தியா சாஹிப் அவர்கள் ஷஹீதாகி விட்டார்கள். காதியானைச் சார்ந்த தர்வேஷ் ஆன சவுத்ரி மன்சூர் அஹ்மது சீமா சாஹிப் அவர்களின் மனைவியான மதிப்பிற்குரிய புஷ்ரா பேகம் சாஹிபா அவர்களும் தற்போது இலண்டனிலிருந்து வந்த லாஹூரைச் சார்ந்த மதிப்பிற்குரிய ரானா முபாரக் அஹ்மது சாஹிப் அவர்களும் வஃபாத்தாகி விட்டனர். மர்ஹூமீன்களின் நன்மைகள் எடுத்துக் கூறப்பட்டு அவர்களுக்கு ஜனாஸா காயிப் தொழுகையும் நிறைவேற்றப்பட்டது.

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் மார்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்**
**25 நவம்பர் 2016** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1395 -ஆம் ஆண்டு **நுபுவ்வத்** மாதம் **25 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔ بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ۔ الرَّحْمٰنِ الرَّحِيْمِ۔ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ۔ إِيَّاكَ نَعْبُدُ
وَإِيَّاكَ نَسْتَعِيْنُ۔ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ۔ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ۔

நம்பிக்கையாளர்களே! நீங்கள் நீதியை நிலைநாட்டுவதில் நிலைத்திருங்கள். உங்கள் சாட்சியம் உங்களுக்கோ, உங்கள் பெற்றோருக்கோ, நெருங்கிய உறவினர்–களுக்கோ எதிராக அமைந்தாலும் அல்லாஹ்வுக்காக சாட்சி கூறுபவர்களாக இருங்கள். யாருக்காக சாட்சி கூறப்பட்டதோ அவர் பணக்காரராயினும், ஏழையாயினும் சரியே. அல்லாஹ் அவ்விருவருக்கும் அதிக அளவில் நம்மையை விரும்பக்கூடியவன் ஆவான். நீங்கள் நேர்மையுடன் செயல்படும் பொருட்டு அற்ப ஆசைகளை பின்பற்றாதீர்கள். நீங்கள் உண்மையை மறைத்தாலோ தட்டிக் கழித்தாலோ நீங்கள் செய்வதை அல்லாஹ் நன்கறிகின்றான் என்பதை நினைவில் கொள்ளுங்கள். (4:136)

உலகப் பிரச்சனைகளுக்குரிய தீர்வு இஸ்லாமிய போதனைகளில் உள்ளது என்று நாம் உலகிற்கு கூறுகிறோம். அது தொடர்பான இஸ்லாமிய போதனைகளை எடுத்தும் வைக்கின்றோம். எனது கனடா சுற்றுப் பயணத்தின் போது இன்றைய உலகப் பிரச்சனைகளுக்கு நீங்கள் என்ன தீர்வு கூறுகின்றீர்கள்? என்று ஒரு பத்திரிகையாளர் என்னிடம் கேட்டார். உலகவாதிகளாகிய நீங்களும் உலக வல்லரசுகளும் தத்தமது வட்டத்தில் பிரச்சனைகளை தீர்ப்பதற்கும், உலகில் அமைதியை நிலைநாட்டுவதற்கும், தீவிரவாதத்தை ஒடுக்குவதற்கும் தன்னால் இயன்ற அனைத்து முயற்சிளையும் செய்து விட்டீர்கள். ஆனால் பிரச்சனைகள் அப்படியே தான் இருக்கின்றன. ஒரிடத்தில் பிரச்சனைகள் குறைந்தால் மற்றொரிடத்தில் நெருப்பின் ஜுவாலை கொளுந்து விட்டு எரிகின்றது. அங்கு பிரச்சனைகளை தீர்ப்பதற்கு நீங்கள் முயற்சி செய்தால் பழைய இடத்தில் மீண்டும் குழப்பம் ஆரம்பமாகி விடுகின்றது. இந்த குழப்பங்களை முடிவுக்கு கொண்டு வருவதற்கு அனைத்து உலகியல் முயற்சிகளும் செய்யப்பட்டு விட்டன. ஒரேயொரு முயற்சி மட்டும் இன்னும் செய்யப்படவில்லை. அது இஸ்லாமிய போதனைகளின் ஒளியில் அப்பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதாகும்.

இவ்வாறு பதிலளிக்கும் போது கேள்வி கேட்கும் நபர்கள் மௌனமாகி விடுகின்றனர். ஆனால் துரதிஷ்டவசமாக முஸ்லிம் நாடுகள் இஸ்லாமிய முழக்கங்களை இடுகின்றன. ஆனால் இறைவன் வழங்கிய போதனைகளின்படியும், இறைவனுடைய எதிர்பார்ப்புகளுக்கு ஏற்பவும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்மாதிரிகளின்படியும் இந்த முஸ்லிம் நாடுகள் செயல்படுவதில்லை என்பதையும் நாம் பார்க்க வேண்டும். அந்த போதகைளின்படி செயல்படுவதற்கு

அவர்கள் முயற்சியும் செய்வதில்லை. இதன் விளைவாக எல்லாரையும் விட அதிகமாக முஸ்லிம் நாடுகளே குழப்பத்தால் பீடிக்கப்பட்டிருக்கின்றன. இதை விட வேதனைக்குரிய விஷயம் வேறு என்ன இருக்க முடியும்?

இந்த இஸ்லாமிய போதனைகளில் செயல் ரீதியான உண்மைத்துவம் இருக்குமென்றால் முதலில் இஸ்லாமிய நாடுகள் அதன்படி அமல் செய்யட்டும் என்று இதுவரை என்னிடம் எந்த பத்திரிகையாளரும் நேரடியாக கூறிவில்லை. ஆனால் அவர்களின் எண்ணங்களில் இந்த கேள்வி கண்டிப்பாக எழலாம்; நிச்சயமாக எழும். எனவே, நான் பொதுவாக அந்நியர்களுக்கு மத்தியில் சொற்பொழிவாற்றும் போது அவர்களிடத்தில் முதலில் முஸ்லிம்களின் நிலையை எடுத்துரைத்து பின்னர் வல்லரசுகளின் அசல் நிலைகளை அவர்களுக்கு வெளிப்படுத்துகின்றேன். பத்திரிகையாளர்களுக்கு முன்பு அல்லது நேர்காணலின் போது முஸ்லிம்கள் இஸ்லாமிய போதனையின்படி அமல் செய்யாமல் இருப்பதும் கூட இஸ்லாம் மற்றும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைத்துவத்திற்கான சான்றாகும் என்று கூறுவதுண்டு. ஏனென்றால் நபி (ஸல்) அவர்கள் மிகத் தெளிவாக கூறியிருக்கின்றார்கள்.

முஸ்லிம்களில் இதுபோன்ற நிலை ஏற்படும். அவர்கள் இஸ்லாமிய போதனைகளின் உண்மை நிலையை மறந்து விடுவார்கள். மேலும் அவர்கள் மன இச்சைகள் மற்றும் சுயநலனுக்கு முன்னுரிமை வழங்குவார்கள் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியிருந்தார்கள். (அல் ஜாமிஃ ஷுஉபுல் ஈமான் தொகுகுதி 3 பக்கம் 317-318 ஹதீஸ் 1763 பைரூத்திலுள்ள அர்ருஸ்து அச்சகத்தில் 2004 -ல் அச்சிடப்பட்டது) இதுபோன்ற நிலை ஏற்படுகின்ற போது நபி (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பர் தோன்றுவார். அவரை பற்றி திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ளது. மேலும் அவர் தோன்றும் காலத்தின் அடையாளத்தைப் பற்றியும் திருக்குர்ஆன் கூறியுள்ளது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களும் அந்த அடையாளங்களை மிகத் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார்கள்.

எனவே, ஓர் அஹ்மதி முஸ்லிம் உலகின் இந்த நிலைகளைக் கண்டு கவலை கொள்வதற்கு பகரமாக ஒரு வகையில் மகிழ்ச்சியடைய வேண்டிய தருணமாகும். நபி (ஸல்) அவர்கள் முஸ்லிம்களைப் பற்றி செய்த முன்னறிவிப்புகள் குறிப்பாக அவர்களின் உலமாக்களைப் பற்றி செய்த முன்னறிவிப்புகள் முழுமையடைந்து விட்டன. நாம் அதற்கு சாட்சிகளாக ஆகிவிட்டோம். தற்போது இந்த விஷயத்தை அஹ்மதி அல்லாத முஸ்லிம்கள் கூட கூறத் தொடங்கி விட்டனர். குறிப்பாக தமது உலமாக்களுக்கெதிராக அவர்கள் குரல் கொடுக்கத் துவங்கி விட்டனர். அந்த குரல் மிக தாழ்ந்த குரலாகவே இருக்கின்றது. எனவே அஹ்மதி முஸ்லிம்களாகிய நாம் நபி (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பின் ஒரு பகுதி நிறைவடைந்து விட்டது என்பதை எண்ணி மகிழ்ச்சியடைகின்றோம். மேலும் நாம் நபி (ஸல்) அவர்களின் மற்றொரு பகுதி முன்னறிவிப்பை முழுமை செய்யக்கூடியவர்களாவும் இருக்கின்றோம் என்பதை எண்ணியும் மகிழ்ச்சியடைகின்றோம். அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட நபரை மேலும் நபி (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரை அதாவது வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் வாக்களிக்கப்பட்ட மஹ்தியை ஏற்றுக் கொண்ட மக்களாக நாம் திகழ்கின்றோம். அன்னாரின் மூலமாகவே இஸ்லாமிய மறுமலர்ச்சிக்குரிய காலகட்டம் ஆரம்பமாகி உள்ளது. ஆனால் இந்த விஷயம் மட்டும் நமது நோக்கத்தை அடைந்து விட்டவர்களாக நம்மை ஆக்கி விடுமா?

இது எப்படிப்பட்ட கேள்வி என்றால், இந்த கேள்வியை நம்மில் ஒவ்வொருவரும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். நான் தற்போது துவக்கத்தில் ஓதிய வசனத்தை பல்வேறு சந்தர்ப்பங்களில் அந்நியர்கள் முன் நிகழ்த்திய சொற்பொழிவில் ஓதி காட்டியுள்ளேன். இஸ்லாம் நீதியை நிலைநாட்டுவதற்காக எடுத்துரைக்கும் தரம் இந்த வசனத்தில் கூறப்பட்டுள்ளது என்றும் நான் அவர்களுக்கு கூறுகின்றேன். பெரும்பாலான மக்கள் அதைக் கேட்டு தாக்கத்திற்கு உள்ளாகின்றனர். தமது சொற்பொழிவுகளில் அதனை குறிப்பிடவும் செய்கின்றனர். அறிவார்ந்த ரீதியில் பிறரை தாக்கத்திற்கு உள்ளாக்குவது மட்டும் நமது பணியல்ல. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நோக்கத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு இஸ்லாமிய போதனைகளை நமது செயல் முன்மாதிரிகளாக வெளிப்படுத்திக் காட்டுவது அவசியமாகும். இந்த இஸ்லாமிய கட்டளைகளை செயல்படுத்திக் காட்டுவதற்கு நம்மிடத்தில் ஆட்சி அதிகாரம் இல்லை. அந்த நேரம் வருகின்ற போது இன்ஷா அல்லாஹ் உயர்மட்ட அளவிலும் அந்த முன்மாதிரிகளை நமக்கு வெளிப்படுத்த நேரிடும். ஆனால் இப்போது ஜமாஅத் அளவிலும் சமூக அளவிலும் இந்த முன்மாதிரிகளை நாம் நிலைநாட்டுவது அவசியமாகும்.

உங்களிடம் ஆட்சி அதிகாரம் இல்லை என்பது சரிதான். ஆனால் உங்களுக்கென்று ஒரு ஜமாஅத் அமைப்பு உள்ளது. நீங்கள் ஒரு ஜமாஅத்தாக இருக்கின்றீர்கள். நீங்கள் ஒரு தலைமையின் கீழ் செயல்படுவதாக வாதம் புரிகின்றீர்கள். உங்களுக்கிடையிலான தொடர்புகள் இருக்கின்றன. அவற்றில் நீங்கள் நீதி மற்றும் நேர்மையின் உயர் தரத்தை நிலைநாட்டுகின்றீர்களா ? என்று உலகம் நம்மிடம் கேட்கக்கூடும்.

அல்லாஹ் இந்த வசனத்தில் 'கிஸ்த்' என்ற சொல்லைப் பயன்படுத்தி இருக்கின்றான். மற்றொரிடத்தில் அத்ல் என்ற சொல்லை பயன்படுத்தியுள்ளான். அதன் பொருள் சமத்துவம், முழுமையான நீதி, நல்லொழுக்கத்தில் உயர் தரம், ஒரு தரப்பிற்கு ஆதரவாக செயல்படுவதிலிருந்து முற்றிலும் தூய்மையாக இருத்தல் மற்றும் எந்த தாக்கத்திற்கும் உள்ளாகாமல் பணி செய்தல் போன்றவையாகும்.

இப்போது நம்மில் ஒவ்வொருவரும் இதனை ஆய்வு செய்வது அவசியமாகும். நாம் மேற்கூறப்பட்ட விஷயங்களை கருத்தில் கொண்டவாறு நமது விவகாரங்களில் நாம் செயல்படுகின்றோமா? நாம் அந்த தரத்தை நிலைநாட்டுவதற்கு நமக்கெதிராக சாட்சி கூறுவதற்கு தயாராக இருக்கின்றோமா? நாம் இந்த தரத்தை நிலைநாட்டுவதற்காக நமது பெற்றோருக்கு எதிராக கூட சாட்சி கூற தயாராக இருக்கின்றோமா? நாம் அந்த தரத்தை நிலைநாட்டுவதற்காக நமது நெருங்கிய உறவினர்களுக்கு எதிராக கூட சாட்சி கூற தயாராக இருக்கின்றோமா? இங்கு நெருங்கிய உறவினர்கள் என்பதில் முதலில் பிள்ளைகள் ஆவர். நாம் இந்த தரத்தை நிலைநாட்டுவதற்காக நமது மன இச்சைகளை வீழ்த்துவதற்குரிய தைரியம் கொண்டுள்ளோமா? செயல் ரீதியாக அதை நம்மால் நிரூபித்தும் காட்ட முடியுமா? என்று ஆய்வு செய்ய வேண்டும்.

இவையெல்லாம் சாதாரண விஷயங்கள் அல்ல. இக்காலத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பர் இதற்குரிய முன்னுதாரனங்களை நமக்கு வெளிப்படுத்திக் காட்டிச் சென்றுள்ளார்கள். ஓரிடத்தில் ஒரு சம்பவம் வருகின்றது. அன்னாரின் தந்தையார் காதியானின் பகுதியின் தலைவராக இருந்தார்கள். ஒரு குடும்ப வழக்கு தொடரப்பட்டது. அந்த வழக்கில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது குடும்பத்திற்கு ஏற்படும் பாதிப்பை பொருட்படுத்தாமல் எதிர்தரப்பிற்கு ஆதரவாக சாட்சி கூறினார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அந்த சொத்திற்கு உரிமை படைத்தவர்களாக இருந்தார்கள். அந்த சொத்தில் பங்குதாரராக இருக்கின்றார்கள் என்பதை அந்த ஏழை மனுதாரர்கள் நன்கு அறிந்திருந்தும் நீதிமன்றத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சாட்சியின் அடிப்படையில் தீர்ப்பு வழங்கும்படி கூறினார்கள். ஏனென்றால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எப்போதும் நீதி, நேர்மையில் நிலைத்திருந்து சாட்சி கூறுவார்கள் என்பதை அவர்கள் நன்கு அறிந்திருந்தனர். ஹுஸூர் (அலை) அவர்களும் அவர்களுக்கு சாதகமாகவே சாட்சி கூறினார்கள்.

(குத்பாத்தே மஹ்மூது தொகுதி 17 பக்கம் 542-543)

ஆக, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த முன்னுதாரணத்தை தன்னை ஏற்றுக் கொண்ட மக்களிடமும் காண விரும்பினார்கள். ஏனென்றால், திருக்குர்ஆனின் போதனைகளின்படி செயல்படக் கூடிய ஜமாஅத்தை அன்னார் உருவாக்க விரும்பினார்கள். அந்த ஜமாஅத்தின் நன்மையின் தரம் உயர்ந்ததாக இருக்க வேண்டும் என்றும் அன்னார் விரும்பினார்கள். எனவே தான் திருக்குர்ஆனின் முழுமையான ஆதிக்கத்தை தன்னுள் செயல்படுத்தி நம்மிடம் பைஅத் உடன்படிக்கையை வாங்கியுள்ளார்கள்.

திருக்குர்ஆனில் மற்றொரு இடத்தில் அல்லாஹ் கூறுகின்றான்.

وَلَا يَجْرِمَنَّكُمْ شَنَاٰنُ قَوْمٍ عَلٰٓى اَلَّا تَعْدِلُوْا ؕ اِعْدِلُوْا ۟ هُوَ اَقْرَبُ لِلتَّقْوٰى

ஒரு சமுதாயத்தின் பகைமை உங்களை நீதியுடன் நடக்காதவாறு தூண்ட வேண்டாம். நீங்கள் நீதியுடன் நடந்து கொள்ளுங்கள். இதுதான் இறையச்சத்திற்க மிக நெருங்கியது. **(5:9)**

இது தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: எதிரி சமுதயாத்தின் மீதான பகைமை உங்களை நீதியிலிருந்து விலக்கி விட வேண்டாம். நீதியில் நிலை நில்லுங்கள். இதில் தான் இறையச்சம் உள்ளது. நான் மெய்யாகவே கூறுகின்றேன். எதிரிகளிடம் மென்மையாக நடந்து கொள்வது எளிதானதாகும். ஆனால், எதிரிகளின் உரிமைகளைப் பேணுவதும், வழக்குகளில் நீதி, நேர்மையைப் பாதுகாப்பதும் மிகவும் கடினமான காரியமாகும். மேலும், இது ஆண் மகனின் பணியாகும்.

கூறுகின்றார்கள்: பெரும்பாலான மக்கள் தமது எதிரிகளிடம் அன்பு காட்டுகின்றார்கள். இனிக்க இனிக்க பேசவும் செய்கின்றனர். ஆனால், அவர்களின் உரிமைகளைப் பறித்து விடுகின்றனர். ஒரு சகோதரர் மற்றொரு சகோதரரின் மீது அன்பு காட்டுகின்றார். அன்பு எனும் திரையின் பினனால் நின்று கொண்டு அவரை ஏமாற்றி உரிமைகளைப் பறித்துக் கொள்கின்றார்.

(நூருல் குர்ஆன் எண் 2 ரூஹானி கஸாயின் தொகுதி 9 பக்கம் 409-410)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது ஜமாஅத்தினரின் தரம் மிக உயர்வானதாக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றார்கள். தனது ஜமாஅத்தினரின் நிலை திருக்குர்ஆனின் போதனைக்கேற்ப இருக்க வேண்டுமெனவும் அன்னார் விரும்புகின்றார்கள். ஜமாஅத்தினர் பிறரின் உரிமைகளைப் பறிக்கக் கூடியவர்களாகவும், அநீதி இழைக்கக் கூடியவர்களாகவும் இருக்கக் கூடாது என ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் விரும்புகின்றார்கள். தீர்ப்பு வழங்கும் அதிகாரம் அவர்களுக்கு கொடுக்கப்பட்டால் எல்லா தொடர்புகளிலிருந்தும் விலகி நின்று தீர்ப்பு வழங்க வேண்டும். அந்த தீர்ப்பினால் தமக்கே பாதிப்பு ஏற்பட்டாலும் சரியே. அல்லது தமது பெற்றோர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டாலும் சரியே. அல்லது தனது நெருங்கிய உறவினர்கள் மற்றும் பிள்ளைகளுக்கு பாதிப்பு ஏற்பட்டாலும் சரியே. ஆயினும் நீதியின் உயர்தரமான தரம் நிலைநாட்டப்பட வேண்டும்.

எனவே இதற்கான முன்னுதாரணத்தை நாம் நமக்கு மத்தியில் நிலைநாட்டும் போது தான் நம்மால் உலகிற்கும் கூற முடியும். இன்று நாங்கள் எங்களிடத்தில் மாற்றத்தை உருவாக்கி இஸ்லாமிய போதனைகளின்படி செயல்பட்டு எதிரிகளிடமும் கூட நீதியுடன் நடந்து கொள்ளும் தைரியம்

எங்களிடம் இருக்கின்றது என்று நம்மால் கூற முடியும். நமக்கெதிராக சாட்சி கூற வேண்டியது வந்தாலும் சரியே. எங்களுக்கோ, எங்கள் பெற்றோருக்கோ, நெருங்கிய உறவினருக்கோ எதிராக சாட்சி கூற வேண்டியது நேரிட்டாலும் நாங்கள் உண்மையில் நிலைநின்று சாட்சி கூறுவோம். எதிர்காலத்தில் நாமே இந்த உலகத்தை வழிநடத்த நேரிடும் என்பதால் நாங்கள் இந்த முன்னுதாரணத்தை வெளிப்படுத்துகிறோம். இந்த முன்னுதாரனங்கள் இல்லை என்றால் அந்நிலையில் நாம் அல்லாஹ்வின் கட்டளைகளிலிருந்து விலகிச் சென்று நாம் செய்த உடன்படிக்கைக்கு மாற்றம் செய்து நம்பிக்கை துரோகம் செய்பவர்களாக நாம் இருப்போம்.

எனவே, ஒவ்வோர் அஹ்மதியிடமும் நான் கூறுவேன். குறிப்பாக நான் ஜமாஅத் பொறுப்பாளர்களிடம் கூறுவேன். அவர்கள் ஒவ்வொருவரும் தங்களைத் தானே ஆய்வு செய்ய வேண்டும். அவர்கள் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட அமானிதங்களுக்குரிய உரிமைகளை எந்த அளவிற்கு சரியாக நிறைவேற்றி அவர்கள் நீதியில் நிலைநிற்கின்றார்கள் என்பதை அவர்கள் ஆராய வேண்டும். அவர்களின் ஒவ்வொரு தீர்ப்பும் நீதியின் உயர் தரத்தை வெளிப்படுத்தக் கூடியதாக இருக்க வேண்டும்.

நான் கனடாவிற்கு சென்றிருந்தேன். அங்கும் சில பொறுப்பாளர்கள் பற்றி அல்லது எவர்களிடம் முறையான பொறுப்புகள் ஒப்படைக்கப்படாவிட்டாலும் எவர்கள் சில தொண்டுகளை ஆற்றி வருகின்றனரோ அவர்களைப் பற்றி மக்களுக்கு சில முறையீடுகள் உள்ளன. அதாவது அவர்கள் நீதியுடன் செயல்படுவதில்லை. சிலர் தனது நெருக்கமானவர்களுக்கு ஆதரவாக செயல்படும் எண்ணம் கொண்டிருக்கின்றனர். அல்லது தீர்ப்பு வழங்குகின்றனர். ஒரு விவகாரத்தில் ஏதாவதொரு தரப்பிற்கு ஆதராவாக தீர்ப்பு வழங்க நேரிடும் என்பது உண்மை தான். அந்த தீர்ப்பு மற்றொரு தரப்பிற்கு எதிராக அமையும் என்பதும் சரிதான். ஆனால் நமது வாதங்கள் செவிமடுக்கப்பட்டன என்ற மன ஆறுதல் இரு தரப்பிற்கும் ஏற்பட வேண்டும். நமது தரப்பு வாதங்களைக் கேட்ட பின்னரே தீர்ப்பு வழங்கக் கூடியவர் தனது அறிவிற்கேற்ப முடிவு எடுத்திருக்கின்றார் என்ற மன நிறைவும் இரு தரப்பிற்கும் ஏற்பட வேண்டும்.

பொது விவகாரங்களை எதிர் கொள்ளும் துறைகளில் கஸா எனும் நமது நீதித்துறையும் அடங்கும். அவர்களுக்கு இதில் தொடர்பிருக்கின்றது. (ஜமாஅத்தின்) நீதித்துறை மக்களுக்கிடையிலான சண்டை சச்சரவுகளில் தீர்ப்பு வழங்குகின்றது. அதற்குப் பிறகு உமூரே ஆமா எனும் உள் விவகாரத்துறை இருக்கிறது. அந்த துறையும் இத்துடன் சம்பந்தப்பட்டுள்ளது. அதற்குப் பிறகு தர்பிய்யத் துறை உள்ளது. அதன் பிறகு அதில் சீர்திருத்தக் குழுவின் பணிகளும் அடங்கும். சில நேரங்களில் விவகாரங்களை ஆய்வு செய்வதற்காக சாரணை குழு அமைக்கப்படுகிறது. அவர்களுடைய பணியும் இதில் சம்பந்தப்பட்டுள்ளது. விசாரணைக் குழுவும் இரு தரப்பு விவகாரங்களை செவிமடுக்கின்றது.

எனவே அனைத்து துறைகளும் தீர்ப்பு வழங்கும் போது தனது அனைத்து ஆற்றல்களையும் முழுமையாக பயன்படுத்தி விவகாரங்களை முழுமையாக சீர்தூக்கிப் பார்த்து நுட்பமாக ஆராய்ந்து தீர்ப்பு வழங்க வேண்டும். துஆ செய்ய வேண்டும். அல்லாஹ்விடத்தில் உதவி தேட வேண்டும். சரியான தீர்ப்பு கூறும் பாக்கியத்தை அல்லாஹ்விடத்தில் வேண்ட வேண்டும். எந்தவொரு தீர்ப்பு வழங்குவதற்கு முன்பும் துஆ கண்டிப்பாக செய்ய வேண்டும். சிலர் நாங்கள் எதுவரை நஃபில்கள் தொழுவதில்லையோ அதுவரை தீர்ப்பு வழங்குவதில்லை என கூறுகின்றனர். ஆனால் சிலரோ கவனமற்ற நிலையில் தீர்ப்பு வழங்குபவர்களும் உள்ளனர். அல்லது தனிப்பட்ட ஈர்ப்பின் விளைவாக தீர்ப்பு வழங்குபவர்களும் இருக்கின்றனர். அதே போன்று மக்களுடனான விவகாரங்களில் ஜெனரல் செகரட்டரி துறையும் கையாளுகின்றது. பொதுச் செயலர் மற்றும் அவரது அலுவலகத்தில் பணிபுரியக்கூடிய ஒவ்வொரு ஊழியர்களின் பணி என்னவென்றால் அலுவலகத்திற்கு வரக்கூடிய ஒவ்வொருவரிடமும் கண்ணியமாக நடந்து கொள்ள வேண்டும். தனக்கு விருப்பமான மற்றும் தன்னுடைய நண்பர்களிடம் ஒரு விதமாகவும், தான் அறியாத அல்லது எவர்களுடன் சுமூக உறவு இல்லையோ அவர்களுடன் ஒரு விதமாகவும் நடந்து கொள்ளக் கூடாது. இந்த விஷயத்தை மற்ற துறைகளின் மேலதிகாரிகளும் கண்காணிக்க வேண்டும். எவர்களெல்லாம் மக்கள் விவகாரங்களை கையாளுகின்றார்களோ அவர்கள் அனைவரும் கருத்தில் கொள்ள வேண்டும். தம்முடன் பணி செய்யக்கூடிய ஒவ்வொரு ஊழியரும் நீதியின் எதிர்பார்ப்புகளை முழுமை செய்தவாறு தமது பணியை செய்கின்றார்களா? இல்லையா? என்பதை ஆராய வேண்டும்.

பொறுப்பாளர்களிடம் இந்த அமானிதம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நான் நீதியின் எதிர்பார்ப்புகளை முழுமை செய்தவாறு எனது பணிகளை முழுமையான ஆற்றல்களுடன் செயல்படுத்த முயற்சி செய்வேன் என்ற உறுதிமொழி வாங்கப்பட்டாலும், வாங்கப்படா விட்டாலும் இருந்தாலும் சரியே. அவர் அந்த பொறுப்பை ஒப்புக் கொள்வதே அவர் செய்து கொள்ளும் உடன்படிக்கையாக அமைந்து விடுகின்றது. நான் நீதியின் தேட்டங்களை முழுமை செய்தவாறு பணி செய்வேன் என்ற உடன்படிக்கைக்குள் அவர் வந்து விடுகின்றார். ஜமாஅத் பொறுப்பு எப்படிப்பட்ட ஒரு அமானிதம் என்றால் அதனை ஒப்புக் கொள்வது முற்றிலும் அல்லாஹ்விற்காகவே இருக்க வேண்டும். ஒவ்வொரு நம்பிக்கையாளரும் தனது உடன்படிக்கை மற்றும் அமானிதங்களை பாதுகாக்க வேண்டுமென்ற விஷயத்திற்கு கட்டுப்பட்டவராவார். அவர் அதற்குரிய உரிமைகளை வழங்க வேண்டும் என்பதும் பொதுவான நிதியாகும்.

அல்லாஹ் திருக்குர்ஆனிலும் கூறுகின்றான். وَالَّذِيْنَ هُمْ لِاَمٰنٰتِهِمْ وَعَهْدِهِمْ رٰعُوْنَ தங்களிடம் நம்பி ஒப்படைக்கப்பட்ட பொருள்களையும் தமது உடன்படிக்கை –களையும் பேணிக் காப்பவர்களே நம்பிக்கையாளர் ஆவர்.

எவர்கள் முற்றிலும் அல்லாஹ்விற்காக மட்டுமே பணி செய்யக் கூடியவர் –களாக இருக்கின்றார்களோ அல்லது எவர்கள் நாங்கள் அல்லாஹ்வுக்காக மட்டுமே நாங்கள் பணி செய்கின்றோம் என்று வாதிடுகின்றார்களோ அவர்கள் இந்த விஷயத்தில் எந்த அளவிற்கு விழிப்புடன் இருக்க வேண்டும். எவர்களிடத்தில் ஜமாஅத் பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றதோ அவர்கள் மற்ற நம்பிக்கையாளர்களை விட கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். நான் தலைமையக பொறுப்பாளர்களுக்குத் தான் இவற்றை கூறிக் கொண்டிருக் –கின்றேன் என்று எவரும் நினைத்து விட வேண்டாம். மாறாக, தலைவர்களுக்கும் மற்றும் அவர்களின் செயற்குழு உறுப்பினர்களுக்கும் கூட நான் கூறுகின்ற இந்த விஷயங்கள் பொருந்தும். அவர்கள் தம்மைத் தாமே ஆய்வு செய்ய வேண்டும்.

நாம் நீதியின் எதிர்பார்ப்புகளை முழுமை செய்கின்றோமா? என்று அவர்கள் பார்க்க வேண்டும். இது கனடாவுடன் தொடர்புடைய விஷயம் மட்டுமல்ல. ஜெர்மனியிலிருந்தும், லண்டனிலிருந்தும், உலகின் ஏனைய பல நாடுகளிலிருந்தும் எனக்கு இதுபோன்ற புகார்கள் வருகின்றன. எல்லா இடத்திலும் தனது நடைமுறைகளை சரி செய்து கொள்ள வேண்டிய அவசியமுள்ளது. இல்லையென்றால் நீதியின் தேட்டங்களை முழுமை செய்யாததன் காரணமாக அமானிதங்களையும் உடன்படிக்கைகளையும் பேணிக் காப்பவர்களாக இருக்க மாட்டீர்கள் என்பது மட்டுமல்ல. மாறாக, நம்பிக்கை துரோகம் செய்யக்கூடியவர் –களாகவும் இருப்பீர்கள். நம்பிக்கை துரோகிகளை நான் விரும்புவதில்லை என்று அல்லாஹ் கூறுகின்றான். தொண்டுகளாற்றி நற்கூலி பெறுவதற்கு பகரமாக அநீதியிழைத்து அல்லது அகம்பாவமான நடைமுறையை வெளிப்படுத்தி அல்லாஹ்வின் கோபத்தை பெறக்கூடியவர்களாக ஆகி விடுவீர்கள்.

எனவே, எங்கு தவறுகள் நடக்கின்றதோ அங்கு தவறுகளை மறைப்பதற்கு சாக்குப் போக்குகளை தேடுவதற்கு பகரமாக இஸ்திஃபார் செய்தவாறு தன்னை சீர்படுத்திக் கொள்வதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

எனவே, நமது ஜமாஅத் பொறுப்பாளர்கள் அல்லாஹ்வால் கூறப்பட்ட விதிகளுக்கேற்ப நீதியின் அனைத்து தேட்டங்களையும் நாம் முழுமை செய்கின்றோமா? என்றும் தனது பணிகளிலும் நீதியுடன் நடந்து கொள்கின்றோமா? என்றும் எவர்களுடன் தொடர்புகள் இருக்கின்றதோ அவர்களுடன் நீதியுடன் நடந்து கொள்கின்றோமா என்று ஜமாஅத் பொறுப்பாளர்கள் தம்மைத்தாமே ஆய்வு செய்து பார்க்க வேண்டும். ஜமாஅத் தலைவராகவோ, செயலராகவோ அல்லது அமீராகவோ இருப்பது ஒரு பொருட்டே அல்ல. மேலும் இந்த பதவிகள் எவருக்கும் பாவமன்னிப்பை பெற்று தந்து விடாது. மேலும் இந்த பொறுப்புகளை வகிப்பது என்பது அல்லாஹ்வின் மீதும், அவனது ஜமாஅத்தின் மீதும் செய்கின்ற உபகாரமும் கிடையாது. இறைவன் விரும்புவதற்கேற்ப இவர்கள் தமது அமானிதங்கள் மற்றும் உடன்படிக்கைகளின் உரிமைகளை செலுத்தவில்லை என்றால் மேலும் பற்றுள்ளவர்களாக திகழ்ந்து பணியாற்றவில்லை என்றால் எந்த பயனும் இல்லை.

எனவே, ஒவ்வொரு பொறுப்பாளரும் தூய்மையானவர்களாக திகழ்ந்து அல்லாஹ்வுக்காக மட்டும் பணி செய்ய வேண்டும். தமது ஒவ்வொரு தீர்ப்பிலும் நீதியின் அனைத்து எதிர்பார்ப்புகளையும் முழுமை செய்ய வேண்டும். தவறான தீர்ப்பு வழங்கப்பட்ட ஒரு விவகாரம் உங்களுக்கு முன்னால் வந்தால் நான் ஏற்கனவே கூறியது போன்று தவறை ஒப்புக் கொண்டு அந்த தீர்ப்புகளை சரி செய்யுங்கள். உங்களது ஒழுக்கங்களையும் சரி செய்து கொள்ளுங்கள்.

மேலும், وَقُوْلُوْا لِلنَّاسِ حُسْنًا அதாவது நீங்கள் மக்களுடன் மென்மையாக பேசுங்கள் **(2:84)** என்ற அல்லாஹ்வின் கட்டளையையும் கருத்தில் கொள்ளுங்கள். உயர்ந்த நல்லொழுக்கத்துடன் பேசுங்கள். நான் கூறியது போன்று உலகின் ஒவ்வொரு நாட்டிலுமுள்ள பொறுப்பாளர்களும் தம்மைத் தாமே ஆய்வு செய்ய வேண்டியது அவசியமாகும்.

நான் கனடாவின் உதாரணத்தைக் கூறியதற்குக் காரணம் அங்கு அந்நியர்களால் ஜமாஅத் மிக அதிகமாக அறியப்படுகிறது. எனது சுற்றுப் பயணத்திற்குப் பிறகு ஜமாஅத் அறிமுகம் மேலும் அதிகரித்து விட்டது. ஜமாஅத் அந்நியர்களின் பார்வையில் மிக முக்கிய இடத்தை பெற்று விட்டது. எனவே இந்த வகையில் எல்லா ரீதியிலும் நமது முன்னுதாரனங்களை நிலைநாட்டுவது அவசியமாகும். குறிப்பாக ஒவ்வொரு பொறுப்பாளரும் பொதுவாக, ஒவ்வோர் அஹ்மதியும் உலகின் முன்னிலையில் ஒரு முன்னுதாரணமாக திகழ வேண்டும். உலகில் எங்கு குழப்பங்கள் மற்றும் சண்டை சச்சரவுகள் மற்றும் நிம்மதியின்மை, பிறரின் உரிமைகளை பறிக்கின்ற முன்னுதாரனங்கள் காணக் கிடைக்கின்றதோ அங்கு நீதி மற்றும் பிறரின் உரிமைகளை வழங்குதலின் முன்னுதாரணங்கள் ஜமாஅத்தில் தென்பட வேண்டும். இந்த அறிமுகத்தின் மூலமாக உலக மக்கள் பார்ப்பார்கள். இந்த ஜமாஅத்தின் ஒவ்வோர் உறுப்பினரும் ஒரு முன்னுதாரணமாக இருக்கின்றார்களே என்று அவர்கள் பார்ப்பார்கள். பொறுப்பாளர்களுக்கு மட்டுமே இது கடமையாகும் என்பதல்ல. ஒவ்வொரு அஹ்மதிக்கும் இதில் கடமை உள்ளது. ஒவ்வொரு அஹ்மதியும் தமக்கிடையிலான தொடர்புகளில் உயர்தரமான முன்னுதாரணங்களை வெளிப்படுத்த வேண்டும்.

நீதியின் எதிர்பார்ப்புகளை முழுமை செய்ய வேண்டும். தனது ஒழுக்கங்களை உயர்தரமானதாக ஆக்கிக் கொள்ள வேண்டும். தங்களுக்கிடையிலான விவகாரங்களில் ஒருதலைப்பட்சமாக எந்தவொரு வகையிலும் செயல்படுவதில் இருந்து முற்றிலும் தூய்மையானவர்களாக அவர்கள் இருக்க வேண்டும். எந்தவொரு பக்கமும் அவர்கள் சாய்ந்திருக்கக் கூடாது. அஹ்மதியின் சாட்சியும் கூற்றும் நீதி மற்றும் உண்மையின் முன்னுதாரனங்களாக இருக்க வேண்டும். அஹ்மதிகள் சாட்சி கூறியிருந்தால் அதற்கெதிராக முறையிடவே முடியாது என்று உலகம் கூற வேண்டும். ஏனென்றால் அந்த சாட்சிகள் நீதியின் உயர் தரத்தை எட்டியிருக்கும். நாம் இந்த நிலையை உருவாக்கி விட்டால் பின்னர் நாம் நமது சொற்பொழிவுகளில் நமது பேச்சுக்களில் நமது பிரச்சாரத்தில் நாம் உண்மையாளர்களாவோம். இல்லையென்றால் அந்நிலையில் மற்றவர்கள் எப்படியோ அப்படியே நாமும் இருப்போம். நாம் பைஅத் உடன்படிக்கையின்போது நாம் எல்லா தீமைகளிலிருந்தும் விலகி இருப்போம் என்று உடன்படிக்கை செய்திருக்கின்றோம் என்பதை ஒவ்வொரு அஹ்மதியும் நினைவில் கொள்ள வேண்டும். உடன்படிக்கைகளை பேணாமல் இருப்பதும், வேண்டுமென்றே அதன்படி செயல்படாமல் இருப்பதும் நம்பிக்கை துரோகமாகும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஒரு உண்மையான நம்பிக்கையாளரின் அடையாங்களை எடுத்துரைத்தவாறு கூறுகின்றார்கள்.

ஒருவருடைய உள்ளத்தில் நம்பிக்கையும் நிராகரிப்பும் ஒன்றுபட முடியாது. உண்மையும் பொய்யும் ஒன்றுபடவே முடியாது. அதே போன்று அமானிதமும், நம்பிக்கை துரோகமும் ஒன்றுபட முடியாது. (முஸ்னது அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 3 பக்கம் 320. முஸ்னது அபீ ஹுரைரா ஹதீஸ் 8577. பைரூத்திலுள்ள ஆலமுல் குதுபில் 1998 -ல் அச்சிடப்பட்டது)

மற்றொரு ஹதீஸில் அன்னார் கூறுகின்றார்கள்: இதனை ஜமாஅத் பொறுப்பாளர்களும் கவனத்தில் கொள்ள வேண்டும். மேலும் ஒவ்வோர் அஹ்மதியும் கருத்தில் கொள்ள வேண்டும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்: மூன்று விவகாரங்களில் ஒரு முஸ்லிமின் உள்ளம் நம்பிக்கைத் துரோகம் செய்யாது. அந்த மூன்று விஷயங்கள் இதுவாகும். (1) அல்லாஹ்வின் பணிகளில் தூய்மையான எண்ணம் (2) எல்லா முஸ்லிம்களுக்கும் நன்மையை விரும்புவது; அனைவருக்கும் நன்மையை விரும்புவது (3) ஜமாஅத்துல் முஸ்லிமீன்களோடு இணைந்திருப்பது ஆகும். (சுனன் திர்மிதி கிதாபுல் இல்ம் பாபு ஜாஅ ஃபீ உம்மத்தி அலா தப்லீகிஸ்ஸமாயி ஹதீஸ் 2658)

நான் கூறியது போன்று அல்லாஹ்வின் மார்க்கத்தின் கடமைகளை ஆற்றுவது அதிலும் நீதியின் தேட்டங்களை முழுமை செய்தவாறு பணியாற்றுவது மற்றும் தூய எண்ணத்துடன் பணிகளை ஆற்றுவது தான் அல்லாஹ்வின் அமானிதங்களுக்குரிய உரிமைகளை வழங்குவதாகும். ஒவ்வொரு நபரும் பிறருக்குரிய உரிமைகளை வழங்குவது அவசியமாகும். நம்மில் ஒவ்வொருவரும் பிறருக்குரிய உரிமைகளை வழங்குகின்றவர்களாக ஆகிவிடுகின்ற நிலையில் உரிமைகளுக்கான போராட்டம் தானாகவே முடிந்து விடும். எனது உரிமைகளை கொடுங்கள் என்ற பேச்சுக்கே இடம் இருக்காது. மாறாக, உரிமைகளை வழங்கக்கூடியவர்களாக அனைவரும் இருப்பர். இதனை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஒரு உண்மையான நம்பிக்கையாளரின் அடையாளமாக கூறியுள்ளார்கள்.

அடுத்து ஒவ்வோர் அஹ்மதியும் நினைவில் கொள்ள வேண்டும். ஜமாஅத்துல் முஸ்லிமீனோடு இணைந்திருப்பது தான் ஒருவரை உண்மையான முஸ்லிமாக ஆக்குகின்றது. இன்று உலகில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் மட்டும் தான் ஜமாஅத் என்று அழைக்கப்படுகிறது. உலகில் இந்த ஒரு ஜமாஅத் தான் ஜமாஅத்தாக அடையாளம் காணப்படுகிறது. இதைத் தவிர்த்து உலகில் உலகளாவிய ஜமாஅத் என்று எந்த ஜமாஅத்தும் இல்லை. முழு உலகிலும் ஒரே ஜமாஅத்தாக அறியப்படுகின்ற எந்த ஜமாஅத்தும் இல்லை. எனவே அப்படிப்பட்ட இந்த ஜமாஅத்துடன் இணைந்திருப்பதும், ஜமாஅத் அமைப்பின் அங்கமாக இருப்பதும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழிகாட்டலுக்கேற்ப ஒருவரை உண்மையான முஸ்லிமாக ஆக்குகின்றது. ஒவ்வோர் அஹ்மதியும் இந்த விஷயத்திற்காக எவ்வளவு நன்றி கூறினாலும் அது குறைவு தான். கிலாஃபத் மற்றும் ஜமாஅத் அமைப்பிற்கு முழுமையாக கட்டுப்படுவது தான் நீங்கள் தெரிவிக்கின்ற உண்மையான நன்றியாக இருக்கும். இப்படிப்பட்ட நன்றியுணர்வை வெளிப்படுத்தும் நற்பாக்கியத்தை அல்லாஹ் ஒவ்வோர் அஹ்மதிக்கும் வழங்குவானாக. நீதியின் தேட்டங்களை முழுமை செய்யும் நற்பாக்கியத்தையும் அல்லாஹ் ஒவ்வோர் அஹ்மதிக்கும் வழங்குவானாக!

ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் சாட்சி கூற வேண்டிய நிலை ஏற்பட்டால் ஒருபோதும் நம்பிக்கை துரோகம் செய்தல் கூடாது. ஜமாஅத்தின் ஒவ்வொரு பொறுப்பாளரும் தமது பொறுப்புகளை உணர வேண்டும். மேலும் தனது உடன்படிக்கை மேலும் அமானிதங்களை முழுமை செய்யக்கூடியவர்களாக திகழ வேண்டும். மேலும் தனது அனைத்து கடமைகளையும் நீதியின் தேட்டங்களை முழுமை செய்தவாறு செயல்படுத்த வேண்டும். இந்த அழகிய போதனை நமது சந்ததியிடமும் நிலைபெற வேண்டும். அதற்காக முயற்சியும் செய்ய வேண்டும். ஏனென்றால் அப்போது தான் நேரம் வரும் போது உண்மையான நீதியின் முன்னுதாரனங்களை நாம் உலகிற்கு வெளிப்படுத்திக்காட்ட முடியும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த நீதியை நிலைநாட்டினார்களோ அதனை நாம் நிலைநாட்ட வேண்டும். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பர் இக்காலத்தில் எந்த முன்னுதாரனங்களை நிலைநாட்டியுள்ளார்களோ அதனை நாம் நிலைநாட்ட வேண்டும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நம்மிடம் அந்த எதிர்பார்ப்பை வைத்துள்ளார்கள். அல்லாஹ் நம் அனைவருக்கும் அதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக!

ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு நான் சில ஜனாஸா காயிப் தொழுகைகளை தொழ வைப்பேன். முதலாவது ஜனாஸா மதிப்பிற்குரிய அத்னான் முஹம்மது குர்தியா சாஹிப் அவர்களுடையதாகும். அவர் சிரியா நாட்டின் ஹலப் நகரை சார்ந்தவர் ஆவார். அவரை 2013 ஆம் ஆண்டில் சிரியாவில் ஒரு தீவிரவாத அமைப்பு கடத்திச் சென்றது. அதற்குப் பிறகு ஷஹீதாக்கி விட்டது. அத்னான் சாஹிப் 1971 –ல் சிரியாவின் நகரமான ஹலபில் பிறந்தார்கள். 2003 ஆம் ஆண்டு தமாஸுர் சாஹிபா என்ற பெண்மணியை திருமணம் செய்தார்கள். அத்னான் சாஹிபின் மாமனார் யாஸீன் ஷரீஃப் சாஹிப் 2007 ஆம் ஆண்டு பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்தார். அன்னாரது தப்லீக்கின் மூலமாக அன்னாரது மற்ற பிள்ளைகளும், தமாஸிர் சாஹிபா என்ற அவரது மகளும் பைஅத் செய்யும் நற்பாக்கியம் பெற்றனர். இவ்வாறாக அத்னான் சாஹிப் அவர்களின் குடும்பத்தில் அஹ்மதிய்யத் தொடர்பான பேச்சு துவங்கியது. அத்னான் சாஹிப் அதிகமாக படித்திருக்கவில்லை. பெரும்பாலும் மவ்லவிகளுக்கு பின்னாலேயே சென்று வந்தார்.

2010 –ல் அவரது மனைவி பைஅத் செய்த போது மவ்லவிகள் தூண்டி விட்டதன் காரணமாக நீ வீட்டில் M.T.A பார்த்தால் அல்லது அஹ்மதிய்யத்தைப் பற்றி பேசினால் நான் உனக்கு தலாக் கொடுத்து விடுவேன் என்று கூறினார். அவரது மாமனார் யாஸீன் ஷரீஃப் சாஹிப் திருக்குர்ஆன், சுன்னத் அடிப்படையில் அவருக்கு புரிய வைத்து வந்தார்கள். அப்போது அந்நிலையில் அவர் மௌனமாகி விடுவார். ஆனால் மவ்லவிகளுடன் செல்லும் போது அந்த விஷயங்களை மறந்து விடுவார்.

ஷஹீதின் மாமனார் கூறுகின்றார்: 2011 ஆம் ஆண்டு நான் அவரது வீட்டில் அவரது மனைவியுடன் அதாவது எனது மகளுடன் சேர்ந்து திருக்குர்ஆன் ஓதிக்கொண்டிருந்தேன். அவ்வாறு ஓதிக் கொண்டிருக்கும் போது அத்னான் தனது பணியை முடித்து வீட்டுக்கு திரும்பினார். நான் திருக்குர்ஆன் ஓதுவதைப் பார்த்து நான் உங்களுடைய விளக்கவுரையை கேட்க விரும்புகிறேன் என்று கூறினார். அத்ந நேரத்தில் நாங்கள் சூரா பனி இஸ்ராயீலின் இந்த வசனத்தை ஓதிக் கொண்டிருந்தோம். اِذۡ يَقُوۡلُ الظّٰلِمُوۡنَ اِنۡ تَتَّبِعُوۡنَ اِلَّا رَجُلًا مَّسۡحُوۡرًا அதாவது நீங்கள் சூனியம் செய்யப்பட்ட ஒரு நபரை பின்பற்றுகின்றீர்கள் என்று அநீதியாளர்கள் கூறுகின்றார்கள். (17:48) அத்னான் சாஹிபின் மாமனார் அவரிடம் கூறினார். நவூதுபில்லாஹ். ஹஸ்ரத் நபிகள் (ஸல்) அவர்களுக்கு சூனியம் வைக்கப்பட்டது என்று கூறுபவர்கள் அநீதியாளர்கள் ஆவர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது இவ்வாறு பழிசுமத்தப்படுகின்றது. சில முஸ்லிம்களும் இதனை நம்புகின்றனர். ஆனால், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் இதனை நம்புவதில்லை. அதுபோன்ற எந்தவொரு அறிவிப்பையும் ஏற்றுக் கொள்ள முடியாது.

அத்னான் முஹம்மது சாஹிப் அதனைக் கேட்டபோது உடனே தனது போனை எடுத்து மவ்லவியிடம் பேசினார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு சூனியம் வைக்கப்பட்டதா என்று கேட்டார். அதற்கு ஆம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு சூனியம் வைக்கப்பட்டது. அது தொடர்பாக புகாரியில் வந்துள்ளது என்று அவர் கூறினார். அப்போது அத்னான் சாஹிப் கூறினார். நான் ஒரு சாதாரண மனிதர். நான் பாவம் செய்த மனிதராவேன். எனக்கு நெருங்கிய நண்பர்கள் எனக்கு சூனியம் வைக்க முயற்சி செய்தனர். ஆனால் என்மீது எந்த தாக்கமும் ஏற்படவில்லை. அவ்வாறிருக்க ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்களோ இறைவனுக்கு மிகவும் விருப்பமான நபியாக இருந்தார்கள்.

அவ்வாறிருக்க அன்னாருக்கு சிலர் சூனியம் வைத்து விட்டனர் என்பதை நான் எவ்வாறு ஏற்றுக் கொள்ள முடியும். இதைக் கூறி விட்டு போனை ஆஃப் செய்து விட்டார். பின்னர் சில நாட்கள் வரை சிந்தித்துக் கொண்டிருந்தார். பின்னர் ஒருநாள் கூறினார்: எனது மனைவி நல்லொழுக்கமுடைய பெண்மணியாக இருக்க வேண்டும் என்பது எனது ஆசையாக இருந்தது. நீ அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்ட பிறகு உன்னிடத்தில் நிறைய நல்ல மாற்றங்கள் தென்பட்டன. மேலும் குழந்தைகளிடமும் நல்ல முறையில் நடந்து கொண்டாய். இந்த தாக்கம் இறைவன் புறமிருந்து ஏற்பட்டுள்ளது. எனவே நானும் பைஅத் செய்து இப்போது ஜமாஅத்தில் இணைகிறேன் என்று அவர் தனது மனைவியிடம் கூறினார். இவ்வாறு அவர் பைஅத்தும் செய்து விட்டார்.

அன்னாரின் மனைவி கூறுகின்றார்: ஒரு தீவிரவாத அமைப்பின் சில உறுப்பினர்கள் ஜமாஅத்திற்கு எதிராக மிகவும் தீய சொற்களை பேசி வந்தனர். அவர்களது பேச்சைக் கேட்டு எனக்கு மிகவும் வேதனை ஏற்பட்டது. அதனைப் பற்றி நான் அத்னானிடம் கூறினேன். அதற்கு அத்னான்அவர்களை அவர்களின் வழியிலேயே விட்டு விடு. அவர்களுடன் ஒரு போதும் தர்க்கம் செய்ய வேண்டாம்.

EDITOR
MUZZAMMIL AHMAD
SUB EDITOR
RAFEEQ AHMAD
Mobile : + 91 98885-67232
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly **BADAR** Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 2 Thursday 5-12 January 2017 Issue No. 1-2

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com
**ANNUAL SUBSCRIPTION** : Rs.300/-

அவர்களுக்காக துஆ செய்வது மட்டுமே நமது பணியாகும். 2013 ஆண் ஆண்டு ஜுன் மாதம் 20 ஆம் தேதி அந்த அமைப்பின் சில உறுப்பினர்கள் அத்னான் சாஹிபை கடந்தி சென்றனர். சுமார் 2 மாதங்களுக்கு பிறகு அவரை சுட்டுக் கொன்று ஷஹீதாக்கி விட்டனர். إنا لله وإنا إليه راجعون ஷஹாதத்தின் போது அவரது வயது 42 அல்லது 43 இருக்கும்.

அவரது மனைவி கூறுகின்றார்: எனக்கு அவரது ஷஹாதத் தொடர்பாக கனவுகள் வந்து கொண்டு தான் இருந்தன. ஆனால் தெளிவான தகவல்கள் கிடைக்காமல் இருந்தது. ஒரு நாள் நமது எதிரிகளில் ஒருவர் கூறினார். நீ இன்னுமா உனது கணவருக்காக காத்திருக்கின்றாய்? அவர் இனி வர மாட்டார். அவர் கொலை செய்யப்பட்டு விட்டார். அவருக்கு நாங்கள் எவ்வளவோ புரிய வைத்தோம். அஹ்மதிய்யத்தை விட்டு விடு எனக் கூறினோம். அதற்கு அவர் எனது கழுத்து துண்டிக்கப்பட்டாலும் நான் அஹ்மதிய்யத்தை விட மாட்டேன் என கூறினார். அவரது ஷஹாதத் நடந்து காலமாகி விட்டாலும் அவர்களுக்கு இப்போது தான் தெரிய வந்துள்ளது. எனவே ஜானஸா இப்போது தொழ வைக்கப்படுகின்றது.

ஷஹீதின் மனைவி எழுதுகின்றார்: ஷஹீது நல்லடியாராக இருந்தார். தொழுகையை பேணி வந்தார். எப்போதும் வுளுவுடன் இருந்து வர முயற்சி செய்தார். அனுதாபம் மற்றும் அன்பு கொண்ட கணவராக இருந்து வந்தார். பரிவுமிக்க தந்தையாக இருந்தார். பிள்ளைகளின் தர்பிய்யத்தில் எப்போதும் கவலை கொண்டிருந்தார். எல்லாருக்கும் உதவி செய்து வந்தார். உறவுகளை பேணி வந்தார். சந்தாவை முறையாக வழங்குபவராக இருந்தார். மற்றவர்களை விட முந்துவதற்கு முயற் செய்து வந்தார்.

ஷஹீதின் மாமனார் கூறுகின்றார்: அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்ட பிறகு அவரிடத்தில் நல்ல பற்று உருவானது. அவர் தனது வேகன் வாகனத்தை அஹ்மதிகளுக்காக வக்ஃப் செய்தார். ஜுமுஆ நாளன்று பல்வேறு சென்டர்களிலிருந்து அஹ்மதிகளை பள்ளிக்கு அழைத்து வந்தார். பின்னர் திரும்பக் கொண்டு விட்டு விட்டும் வந்தார். இதே போன்று பெண்களை சதர் லஜ்னாவின் வீடு வரை அழைத்து வருவதற்கும், பின்னர் கொண்டு சேர்ப்பதற்கும் தனது வாகனத்தை பயன்படுத்தி வந்தார். அஹ்மதிகள் அதற்குரிய தொகையை கொடுக்க முன்வந்தனர். ஆனால் அவர் வாங்க மறுத்து விட்டார். யாராவது மிகவும் அழுத்தம் கொடுத்தால் வெறும் பெட்ரோலுக்கான செலவை மட்டும் பெற்றுக் கொள்வார். சந்தாக்களில் போட்டி போட்டுக் கொண்டு பங்கு பெற்றார். இந்த சந்தாக்களின் மூலமாக அல்லாஹ் எனது பணிகளில் பரக்கச் செய்துள்ளான் என்று அவர் கூறி வந்தார். அதற்கு உதாரணமாக அவர் இதனை கூறி வந்தார்.

அவர் ஒருவரோடு இணைந்து வேகன் வண்டியை வாங்கினார். அதனை அவரே ஓட்டி வந்தார். அல்லாஹ் அருள் செய்தான். பின்னர் அவர் பார்ட்னர்ஷிப்பில் இருந்து விலகி முழு வாகனத்தையும் சொந்தமாக்கிக் கொண்டார்.

ஷஹீதின் ஒரு உறவினர் கூறுகிறார்: உறவுகளைப் பேணுவதில் மிகவும் கவனமாக இருந்தார். குழப்பங்கள் அதிகரித்து போருக்கான சூழல் ஏற்பட்ட போது எங்கள் பகுதியில் நிலைமை மிகவும் மோசமாகிப் போனது. ரொட்டி கிடைக்காமல் போனது. ஓரிடத்தில் கிடைத்தாலும் கூட விலை அதிகமாக இருந்தது. அதுபோன்ற நிலையில் அத்னான் ஷஹீது தனது அனைத்து உறவினர்களுக்கும் தொண்டாற்றினார். தொலை தூரப் பகுதிக்கு சென்று ரொட்டி வாங்கி தனது உறவினர்களுக்கு கொடுத்து வந்தார்.

ஷஹீது தனக்கு பின்னர் மனைவியையும், ஐந்து பிள்ளைகளையும் விட்டு விட்டுச் சென்றுள்ளார். இரண்டு மகள்கள் வஃபாத்தாகி விட்ட முதல் மர்ஹூமா மனைவிக்கு பிறந்தவர்கள் ஆவர். இரண்டு மகன்களும் ஒரு மகளும் இரண்டாவது மனைவிக்கு பிறந்தவர்கள் ஆவர். அல்லாஹ்வின் அருளால் இவர்கள் அனைவரும் கனடா சென்று விட்டனர்.

இரண்டாவது ஜனாஸா மன்சூர் அஹ்மது சீமா காதியான் தர்வேஷ் அவர்களின் மனைவி மன்சூரா பேகம் சாஹிபா அவர்களுடையதாகும். சிறிது காலம் நோயுற்றிருந்து நவம்பர் மாதம் 7 ஆம் தேதி 2016 ஆம் ஆண்டு 93 ஆம் வயதில் வஃபாத்தாகி விட்டார்கள். إنا لله وإنا إليه راجعون

1923 ஆம் ஆண்டு பாகிஸ்தானில் பிறந்தார்கள். அப்போது பாகிஸ்தான் உருவாகவில்லை தான். அவர்கள் இந்தியாவில் தான் பிறந்தார்கள். ஆனால் அவர்கள் பிறந்த பகுதி தற்போது பாகிஸ்தானிடம் உள்ளது. 1944 –ல் சவுத்ரி மன்சூர் அஹ்மது சீமா சாஹிப் அவர்களுடன் திருமணம் நடைபெற்றது. 1947 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சீமா சாஹிப் தலைமையக பாதுகாப்புப் பணிக்காக காதியான் வந்து விட்டார்கள். அன்னார் தன்னை வக்ஃப் செய்து கொண்டார்கள். 1952 ல் இந்த பெண்மணி தனது கணவருடன் காதியான் வந்து குடியேறினார்கள். தர்வேஷின் காலகட்டத்தை கழித்தார்கள். காதியானை மிகவும் நேசித்தார்கள். கணவர் இறந்த பிறகு 36 ஆண்டு கால வாழ்க்கையை மிகவும் பொறுமையுடன் கழித்தார்கள். அல்லாஹ்வின் அருளால் மிகவும் இறையச்சமுடைய பெண்மணி –யாகவும், படைப்பினங்களின் மீது அனுதாபம் கொண்ட பெண்மணியாகவும் திகழ்ந்தார்கள். தனது வீட்டில் வந்த யாசித்த எவரையும் வெறுங்கையோடு அனுப்பியது கிடையாது. மரணத்திற்கு ஓராண்டு முன்பு வரை ரமலானின் நோன்புகளை நோற்று வந்தார்கள். ஒன்றுக்கும் மேற்பட்ட முறை திருக்குர்ஆனை ஓதி முடித்து வந்தார். தனது சந்ததிகளுக்கு திருக்குர்ஆன் ஓதுவதையும், ஜமாஅத்தாக தொழுவதையும் போதித்து வந்தார்கள். கிலாஃபத் மற்றும் ஜமாஅத் அமைப்பிற்கு முழுமையாக கட்டுப்பட்டு நடப்பதற்கும் அறிவுறுத்தி வந்தார்கள். மிகவும் அதிகமாக துஆ செய்து வந்தார். பொறுமையை மேற்கொள்ளும் பெண்ணாக விளங்கினார்கள். தனது பிள்ளைகளுக்கு சிறந்த முறையில் தர்பிய்யத் வழங்கக் கூடியவராகவும் விளங்கினார். நல்ல சாலிஹான கனவை காண்பவராகவும் விளங்கினார்கள். தனது அனைத்து பிள்ளைகளுக்கும் மார்க்கத்திற்கு மட்டுமே முன்னுரிமை கொடுத்து திருமணம் செய்து வைத்தார். மர்ஹூமா வஸிய்யத் செய்திருந்தார். அவர் 3 மகள்களையும், 5 மகன்களையும் தனது நினைவாக விட்டுச் சென்றுள்ளார். அவர்களில் 3 மகன்கள் வாக்கிஃபீனே ஸிந்தகியாகவும், முரப்பியாகவும் உள்ளனர். அதில் ஒருவர் தாஹிர் அஹ்மது சீமா சாஹிப் ஜாமிஆ அஹ்மதிய்யா காதியானில் ஆசிரியராவார். மற்றொரு மகன் முபாரக் அஹ்மது சீமா அவர்கள் உலியா அலுவலகத்தில் இன்சார்ஜாக உள்ளார். மேலும் தற்போது இந்திய மஜ்லிஸே ஷூராவின் செயலராகவும் உள்ளார். அல்லாஹ் மர்ஹூமாவின் அந்தஸ்தை உயர்த்துவானாக!

மூன்றாவது ஜனாஸா காயிப் மதிப்பிற்குரிய ரானா முபாரக் அஹ்மது சாஹிப் அவர்களுடையதாகும். அன்னார் லாஹூரைச் சார்ந்தவர். பிற்காலத்தில் இங்கு வந்து விட்டார். நவம்பர் 5 ஆம் தேதி 2016 ஆம் ஆண்டு 78 வது வயதில் வஃபாத்தாகி விட்டார். إنا لله وإنا إليه راجعون

அவரது தந்தை மர்ஹூம் ரானா முஹம்மது யாகூப் சாஹிப் ஒரு கனவின் விளைவாக அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டார். குடும்பத்தில் பெரிய எதிர்ப்பு ஏற்பட்டது. வீட்டை விட்டு வெளியேறினார். ஆரம்பத்திலிருந்தே கிலாஃபத் மற்றும் ஜமாஅத்தோடு விசுவாசமிக்க தொடர்பு வைத்திருந்தார். 1967 –லிருந்து ஜமாஅத்திற்கு தொண்டாற்ற ஆரம்பித்தார். அது அவரது மரணம் வரை நீடித்தது. லாஹூர் மற்றும் பஹாவல்பூரில் காயித் மஜ்லிஸாகவும், மால் செயலராகவும், 30 ஆண்டுகள் வரை அல்லாமா இக்பால் டவுண் லாஹூரின் தலைவராக தொண்டாற்றி வந்தார். இது அல்லாமல் நீண்ட காலம் லாஹூர் மாவட்ட செகரட்டரி மாலாகவும், தஹ்ரீகே ஜதீது செயலராகவும், வக்ஃபே ஜதீது செயலராகவும் தொண்டாற்றக்கூடிய நல்வாய்ப்பு கிடைத்தது. ஓய்வு பெற்ற பிறகு தன்னை வக்ஃபிற்காக முன்னிலைப்படுத்தினார். அந்த அடிப்படையில் அவர் அல் ஃபஸல் பத்திரிகையின் பிரதிநிதியாக தொண்டாற்றி வந்தார். மிகவும் மென்மையாக பேசக் கூடியவர். அதிகமாக துஆ செய்யக்கூடியவர். சந்தாவை தொடர்ந்து செலுத்தக் கூடியவர். கிலாஃபத்தோடு மிகவும் அன்பு கொண்டவர். அல் ஃபஸல் பத்திரிகையில் நல்ல கட்டுரைகளை எழுதி வந்தார். பாகிஸ்தானில் இருந்த வரை அங்குள்ள நிலைமைகளையும் யாராவது நோயுற்றால் அவருக்காக துஆவிற்காகவும் எனக்கு கடிதமாக எழுதி வந்தார். இவரிடம் இருந்து தான் எனக்கு முதலில் கடிதம் வரும். பிறருக்காக துஆ வேண்டி கடிதம் எழுதுவார். இவருக்கு ஒரு மனைவியை தவிர்த்து ஒரு மகளும், மூன்று மகனும் உள்ளனர். ஏராளமான பேரன் பேத்திகளும் இருக்கின்றனர். அனைவரும் இங்கு தான் உள்ளனர். அல்லாஹ் மர்ஹூமின் அந்தஸ்த்தை உயர்த்துவானாக.

அதே போன்று ஷஹீது மர்ஹூமின் அந்தஸ்த்தையும் அல்லாஹ் உயர்த்துவானாக! அல்லாஹ் அன்னாரின் பிள்ளைகளை தனது பாதுகாப்பில் வைப்பானாக! தற்போது அவர்கள் சிரியாவிலிருந்து கனடா சென்றடைந்து விட்டனர். அல்லாஹ் அங்குள்ள சூழலிருந்தும் அவர்களை பாதுகாப்பானாக! ஷஹீது மர்ஹூம் நல்ல நோக்கத்திற்காக அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்டார். அல்லாஹ் அவரின் சந்ததிகளிடம் அஹ்மதிய்யத்தை நிலைபெறச் செய்வானாக!

★ ★ ★ ★ ★

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad